ஒட்டக்கூத்தர்

ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 NOV 1956
MADRAS

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை.

பதிப்புரிமை] [விலை ரூ. 1.

முதற் பதிப்பு: அக்டோபர், 1956.

100686
EGMORE, MADRAS

Paper used for this Book is white Printing
Double Crowm 26 lbs.

ஞானோதயா பிரஸ், 11 ஆண்டர்சன் தெரு, சென்னை-1.

முகவுரை

இடைக்காலப் புலவர்களுள் ஒட்டக்கூத்தர் ஒருவர். இவர் சோழ மன்னர் மூவரின் அவைக்களத்தில், பல பட்டங்களைப் பெற்றுப் புலவர் குழாம் போற்ற, அவர்களுக்குத் தலைமை பூண்டு, புலமை அரசு செலுத்தியவர்; பல அரிய நூல்களை இயற்றியவர். இத்தகையவருடைய புகழை உலகம் அறிந்துகொள்ள இயலாதபடி பிற்காலத்தில் தோன்றிய பொய்க் கற்பனைகள் பல மறைத்துவிட்டன. உண்மைக்கு மாருன செவிவழிச் செய்திகள் பலவே இன்று கூத்தருடைய வரலாற்றைச் சூழ்ந்துள்ளன. இந்தக் குறையை நீக்கி, ஒட்டக்கூத்தரின் உண்மை வரலாற்றை எடுத்துக்காட்டுவதே இந்தப் புத்தகத்தின் நோக்கம்.

ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்கள், அவர் காலத்து மூன்று மன்னர்களின் சரித்திர வரலாறுகள், தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம், சில தனிப் பாடல்கள் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு இப்புத்தகம் எழுதப்பெற்றுள்ளது.

ஆராய்ச்சி முறையில் எழுதப்படும் புலவர் வரலாறு, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் சுவையுள்ளதாகாது என்ற நோக்கோடு இந்தப் புத்தகத்தில் ஆராய்ச்சிப் பகுதிகளைக் குறைத்துப் பல நிகழ்ச்சிகள், படிப்பவருக்கு இன்பமும் தமிழறிவும் தோன்றுமாறு கதைபோல் உருவாக்கப்பெற்றுள்ளன.

தமிழ்மொழி வளர்ந்துவரும் இக்காலத்தில் இத்தகைய உண்மை வரலாறுகள் நாட்டிற்கு இன்றியமையாதன வாகும்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	கூத்தரின் அறிமுகம்	...	1
2.	நாடும் காலமும்	...	8
3.	கூத்தர் பிறந்த ஊர்	...	11
4.	பெயர்க் காரணம்	...	15
5.	செல்வியின் திருநோக்கு	...	21
6.	அன்றொரு நாள்	...	25
7.	கவிச் சக்கரவர்த்தி	...	33
8.	மடையனிடம் பரிவு	...	37
9.	பரணி பாடியது	...	46
10.	கங்காபுர மாளிகை	...	51
11.	பட்டமும் பதவியும்	...	58
12.	கூத்தர்காலப் புலவர்கள்	...	66
13.	கூத்தரும் சோமனும்	...	76
14.	பிற உபகாரிகள்	...	80
15.	நூல்களும் இயல்பும்	...	84
16.	கற்பனைச் செய்திகள்	...	93

ஒட்டக்கூத்தர்

1. கூத்தரின் அறிமுகம்

“சோழநாடு செழிப்புக்கு மட்டுமன்று, சிறப்புக்கும் பெயர் பெற்றது. கலை வல்லோர்களும் கவிவாணர்களும் நிலைத்த புகழ் பெற்ற நாடு.”

“இதில் சிறிதும் ஐயமில்லை. அதிலும் நம் மன்னர் பிரான் விக்கிரம சோழர் போர்க்களத்திலே புலியாகவும் அவைக்களத்திலே அறிஞராகவும் காணப்படுகிறார்.”

“இதில் வியப்பொன்றும் இல்லையே. புலிக் கொடியை உடையவர் செயலிலும் புலியாக இருப்பது வழக்கந்தானே. எல்லா வகைகளிலும் தந்தை குலோத் துங்க சோழருக்கு ஏற்ற தனயர் தாம் என்பதை நம் மரசர் காட்டிவிட்டார்.”

“சோழர் குலத்திலே பிறந்தவர் யாரும் புலமை யிலோ வலிமையிலோ என்றும் குறைந்ததில்லை. நேற்று அவைக்களத்திற்கு நீங்கள் வந்திருப்பீர்களேயானால்

நம் அரசர்பிரானுடைய அறிவை அளந்திருக்கலாம். அவருடைய ஒரு சிறு வினா பெரும்புலமையுடையவர்களையும் திகைக்க வைத்துவிட்டது !"

"நான் வராமல் என்ன? வந்திருந்தேன். அடடா! ஓர் இளைஞர் கம்பீரமாக எழுந்திருந்து அரசருடைய வினாவுக்கு விடையிறுத்த காட்சி, இன்னும் என் மனக்கண்முன் நிற்கிறது. 'சிற்றுளியால் கல்லும் தகரும்' என்பார்களே, அது அவரைப் பொறுத்தமட்டில் உண்மையே."

இவ்வாறாகக் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு வீட்டுத் திண்ணையில் இருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

முதலாம் குலோத்துங்கன் மகன் விக்கிரம சோழன், சோழ நாட்டை ஆண்டு வந்த காலம் அது. அவன் தன் தந்தையின் காலத்திலேயே நன்றாக அரசியல் பயிற்சி பெற்றான். தெலுங்கிலும் தமிழிலும் ஓரளவு புலமையுடையவன். தமிழ் மொழியில் மிகுந்த பற்றுடையவனாகி, தமிழையும் தமிழ்ப் புலவர்களையும், தன் கண்ணேபோல் காத்து வந்தான். பல புலவர்கள் அவன் அவையை அணிபெறச் செய்தார்கள்.

ஒரு நாள் புலவர் பெருமக்கள் தன்னைச் சூழ அவன் கொலு வீற்றிருந்தான். அப்பொழுது அவன் தன் அவையை அணிசெய்யும் புலவர் திறத்தை ஆராய அதுவே தக்க சமயமெனக் கருதினான். அதனால் அவன் புலவரை நோக்கி, "வாலி திரௌபதியை மூக்கரிந்ததல்லவா மாபாரதம்!" என்றான்.

அரசன் ஒன்றைக் கூறினால் அதனை ஏற்றுக் கொள்ளாமல் மறுப்பது மரியாதைக் குறைவாகும். மறுக்க வேண்டிய விஷயமாயின் அவன் மகிழ்ச்சி கொள்ளும் வகையில் சமத்காரமாக மறுக்க வேண்டும். புலவர்கள் விக்கிரமன் கூறியதைக் கேட்டார்கள். அரசன் தவருக ஒன்றைக் கூறுகிருன் என்று சிலர் எண்ணினுர் கள். வேறு சிலர் தம் புலமையைச் சோதனை செய்யவே இவ்விதம் கூறினுனே என்று நினைத்தார்கள். விக்கிர மனுடைய குறிப்பு, 'ஆம்! இது உண்மையே! உண்மை யென்று எவரேனும் தக்க ஆதாரத்துடன் கூற முடி யுமா?' என்று கேட்பதுபோல் தோன்றிற்று.

புலவர் தம்முள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண் டார்கள். 'வாலியாவது, திரௌபதியின் மூக்கை அரிந்ததாவது? இராமாயணக் கதை உறுப்பினருள் ஒருவன் வாலி; திரௌபதி பாரதக் கதா பாத்திரம். அர சன் கூறிய தொடர் ஒருகால் சிலேடைப் பொருளதா? அப்படியும் இல்லையே!' என்று எண்ணினுர்கள். 'இதற்கு எவரும் பதில் கூறல் இயலாது; எவரேனும் கூற முன் வருகிருர்களா, பார்ப்போம்!' என்று ஆவ லுடன் புலவர்கள் காத்திருந்தார்கள்.

அந்தப் புலவர் கூட்டத்தில் இருபது ஆண்டும் நிரம் பப் பெருத ஓர் இளைஞர் இருந்தார். மன்னன் இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே அவர் முகத்தில் ஒரு களை தோன்றியது. 'இப்படி ஓர் அரிய பொருளை விக்கிரமன் குறிப்பிடுவதற்கு அவனிடம் எத்துணை அறிவு இருத்தல் வேண்டும்!' என்று மன்னனைத் தம் மனத்துள் வியந்து கொண்டார் அந்த இளைஞர். அவன் வினவுக்கு ஏற்ற

விடை பகரவும் ஆசை கொண்டார். ஆனால் நெடுங் காலமாகப் பேர்பெற்று விளங்கிய முதிய புலவர்கள் இருக்கும்போது தாம் முற்பட்டு எப்படி மறுமொழி கூறுவது! இதுதான் அவருக்கு ஒரு பெரும் சிக்கலாக இருந்தது.

அவையில் அமைதி குடிகொண்டிருந்தது. யாவரும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். என்றும் அத்துணை அமைதி இருந்ததில்லை. அந்த அமைதியை முதலிற் கலைத்தவன் வேந்தனே.

"என்ன! என் கேள்வியைச் சரி என்று கொண்டு பதில் சொல்லுபவர் எவரும் இங்கே இல்லையா?" என்றான் விக்கிரமன்.

அவன் வினா எதிர் ஒலித்ததே ஒழிய மறுமொழி இல்லை.

அரசன் கண்கள் தற்செயலாக அங்கே இருந்த முற்கூறிய இளைஞர்மீது சென்றன. அவர் முகத்தில் பொலிவும் கூச்சமும் ஒருங்கே தோன்றித் தோன்றி மறைவதைக் கண்டுகொண்டான் மன்னவன்.

விக்கிரமன், அந்த இளைஞரைப் பார்த்து, "நீங்கள் இதற்கு விடை கூற விரும்புவதுபோல் காணப்படுகிறீரே?" என்றான்.

மற்றப் புலவர்கள் ஏளனமாகத் தம்முள் நகை செய்தனர். இந்தச் சிறுவனை மதித்து, அரசன் கேட்பது வீணே என்பது அவர்கள் எண்ணம்.

புலவர்கள் தம்மை ஏளனஞ் செய்து நகையாடுவதை இளைஞர் உணர்ந்துகொண்டார். 'அவர்கள் நகையினால் நமக்கு நஷ்டமென்ன? அரசன் நம்மைத் தனித்துக் கேட்டது சிறப்பல்லவா?' என்று எண்ணி அஞ்சாது நின்று, "அரசர்பெரும, தாங்கள் கூறியது உண்மையென் பதில் ஐயம் இல்லை; பெரியாரிடையில் நான் மறுமொழி பகர்வது எங்ஙனமென்று அவையடக்கம் காட்டினேன்; அத்துணையே" என்று சொல்லிவிட்டு,

"புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
சுள்ளிருக்கும் கள்ளையுண்டும் சோர்விலோம்—உள்ளபடி,
சொல்லவா வாலி திரௌபதியை மூக்கரிந்த
தல்லவா மாபா ரதம்!"

புள் - வண்டுகள். தார் - மாலை. பூம்புகார் - அழகிய காவிரிப்பூம் பட்டினம். இது சோழர் தலைநகர்களுள் ஒன்று. களியேம் - கட் குடியர் ஆவோம். சுள் - உறைப்பு.

என்ற வெண்பாவைக் கூறினார்.

இதனைக் கேட்டதும் புலவர்கள் எல்லாம் தம்மை மறந்து, "நன்று! நன்று! இவரல்லவா சிறந்த புலவர்! புலமைக்கு வயது ஓர் வரம்பாகுமா!" என்றார்கள். மன்னன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "இளைஞரே, நீவிர் இப்பொழுதும் அவையடக்கத்தையே காட்டி நிற்கிறீர்" என்று விக்கிரமன் அவரைப் பாராட்டினான். கட் குடியர் கள்ளை நிரம்பக் குடித்துவிட்டுக் குடி மயக்கத்தினால் உண்மையை மறந்து, வாலி திரௌபதியின் மூக்கை அரிந்தான் என்று கூறியதாக இக்கவி அமைந்துள்ளது. கட் குடியர் இங்ஙனம் தம் மனத்திலே

தோன்றுவனவற்றைக் கூறுவதாகச் செய்யப்படும் செய்யுள் களி என்று வழங்கப்படும். களி என்பது கலம்பகம் என்ற நூலின் ஓர் உறுப்பு.

இளைஞர், விடை பகர்ந்ததைப் பாராட்டிய பிறகு, விக்கிரம சோழன் புலவர்களை நோக்கிப் பேசத் தொடங்கினான்.

"நாவன்மை மிகுந்த புலவர்களே! நான் நேற்றுத் தனியே உலாவச் சென்றேன். சென்றவிடத்தில் இருவர், களி மயக்குற்றுத் தம்முள் பிணங்கிக் கிடந்தனர். அவருள் ஒருவன், 'கர்ணன் சண்டை இராமாயணத்துள் அழகாக அமைந்துள்ளது' என்றான். அதனைக் கேட்ட மற்றவன், 'ஏடா, நீ கும்பத்தை விட்டுக் கர்ணன் சண்டை என்று கூறுகிறாயே; கும்பகர்ணன் என்று சொல்லடா!' என்றான். முன்னவன், 'நீதான் கும்பக் கள்ளை வயிற்றிலே போட்டுவிட்டுப் போதையில் இப்படிப் பேசுகிறாய். நான் இன்னொரு செய்தி கூறுகிறேன் பார்' என்றான். 'அது என்னடா?' என்றான் இரண்டாமவன். 'அதுதான் பாரதக் கதை' என்றான் முன்னவன். 'உன் கட்டுக் கதையைக் கூறடா பார்க்கலாம்!' என்றான் மற்றவன். அதன் பின் முதலாமவன், 'வாலி திரௌபதியை மூக்கரிந்த தல்லவா மாபாரதம்!' என்றான். அவர்கள் பேச்சைக் கொண்டு அவர்கள் நன்றாகப் படித்தவர்கள் என்றும், குடி மயக்கத்தால் அப்படிப் பேசிக்கொண்டார்கள் என்றும் அறிந்தேன். நான் இன்று உங்களை வினவிய வினாவுக்கு மூலகாரணம் இந்நிகழ்ச்சிதான்" என்றான்.

புலவர்கள் ஒன்றும் பேசாது, தலை குனிந்தனர். இளைஞர் பல சிறப்புக்களைப் பெற்றார்.

இந்த இளைஞரே ஒட்டக்கூத்தர் என்று தமிழ் நாவலர் சரிதை கூறும். ஒட்டக்கூத்தர் மிகுந்த இளம் வயதில் விக்கிரமன் அரசவைக்கு வந்தார். சில நாளில் அரசவைப் புலவர் ஆனார். விக்கிரமனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராக விளங்கினார். அவனுக்குப் பிறகு முடிபூண்ட இரண்டாம் இராசராசன் காலத்திலும் புலமையரசை நடாத்தி வந்தார்.

புலவர் பெருமானாகிய கூத்தருக்கு அன்று விக்கிரமன் அவையில் கிடைத்த வெற்றியே அவருக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்து அவரை மேன்மைப்படுத்தியது.

2. நாடும் காலமும்

ஒரு புலவருடைய வரலாறு, அவர் பிறந்து வளர்ந்த நாட்டோடும் காலத்தோடும் தொடர்பு கொண்டது. நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்பப் புலவர்கள் தோன்றுகின்றனர். அவர்கள் இயற்றும் நூல்களில், தாம் வாழ்ந்த காலம் பிரதிபலிக்கக் கூடும். ஒட்டக்கூத்தரின் வரலாறும் அவர் எழுதிய நூல்களும் அவர் வாழ்ந்த காலத்தையும் நாட்டையும் ஒட்டியவையாகும். ஆதலின் அவருடைய வாழ்க்கை வரலாற்றை அறியுமுன் அவர் வாழ்ந்த நாட்டையும் காலத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

சங்கத் தமிழ், பாண்டியர் புகழிலே வளர்ந்து, உருவாயிற்று. இடைக்காலத் தமிழ், சோழநாட்டில் செழித்தது. சோழர்கள் ஆதரவில் தமிழும் சமயமும் ஒருங்கே வளர்ந்தன. கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் இரண்டு நூற்றாண்டுகளில் சமயம், கலை, கல்வி ஆகிய இவை மூன்றும் சோழ மன்னரின் ஆதரவில் தமிழ் நாட்டில் ஓங்கியிருந்தன. இந்தக் காலத்தில் சோழ நாட்டை ஆண்ட வேந்தர்கள் இடைக்காலச் சோழர் எனப்படுவர். இடைக்காலச் சோழ வேந்தரில் முதலாம் குலோத்துங்கன் முதல் ஐந்து மன்னர்கள் சாளுக்கிய சோழர் எனப்படுவர். சாளுக்கிய நாடு கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கு இடையிலுள்ள நிலம். இது வேங்கை நாடு என்று வழங்கும். சரித்திரக்காரர்கள் இதனைக் கீழ்ச் சாளுக்கிய நாடு

என்பர். கீழ்ச் சாளுக்கிய நாட்டைச் சார்ந்த தெலுங்க மன்னன் ஒருவன் முதற் குலோத்துங்கன் என்ற பெயரோடு தன் தாய் வழியில் சோழ நாட்டின் உரிமை பெற்று, கங்கைகொண்ட சோழபுரத்தை அரசிருக்கை யாகக்கொண்டு இரண்டு நாடுகளையும் ஆண்டு வந்தான். இவன் மகன் விக்கிரம சோழன்; விக்கிரம சோழன் மகன் இரண்டாம் குலோத்துங்கன். அவனுக்குப் பின் இரண் டாம் இராசராசன், மூன்றும் குலோத்துங்கன் என்பவர் கள் சோழ நாட்டை முறையே ஆண்டார்கள். சாளுக் கிய சோழர்களாகிய இவர்கள் காலத்தில் சயங்கொண் டார், தண்டியாசிரியர், அமிதசாகரர், ஒட்டக்கூத்தர், நம்பி காளி, சேக்கிழார், கம்பர், புகழேந்தி முதலிய புல வர் பெருமக்கள் வாழ்ந்தார்கள்.

வலிமை பெற்ற அரசாட்சியின் கீழ், நாட்டில் அமைதி நிலவுகிறது. அமைதி குடிகொண்ட நாட்டில் செல்வமும் கல்வியும் ஒருங்கே செழிக்கின்றன. இடைக் காலச் சோழர் ஆட்சி இத்தகையது. சோழர்கள் கோயில்களைக் கட்டினார்கள். கோயில்கள் மூலம் சிற்பக் கலையை வளர்த்தார்கள். முதலாம் குலோத்துங்கனைத் தவிர மற்றவர்கள், சமய வேறுபாடில்லாமல் சைவம், வைணவம், சமணம் முதலிய எல்லா மதங்களுக்கும் ஆதரவளித்தனர். அந்த அந்த மதத்தைச் சேர்ந்த புலவர் களையும் ஆதரித்தனர். இவர்கள் பரம சைவர்களாக இருந்துகொண்டு அம்மதத்திற்குத் தக்க வழிகளில் சேவை செய்தனர். இவர்கள் ஆதரவில் பல நூல்கள் தோன்றின. சங்க கால நூல்களுக்கும் இவர்கள் கால நூல் களுக்கும் வேறுபாடு உண்டு. பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் பயிற்சி, இந்தக் காலத்தில் குன்றியது.

நன்னூல், நம்பி அகப்பொருள், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், வீர சோழியம் போன்ற அரிய இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தின் வழி நூல்களாகவோ புதியனவாகவோ இந்தக் காலத்திலேதான் தோன்றின. இக்காலத்தில் தோன்றிய பிரபந்த வகைகளுள் பரணி, உலா, பிள்ளைத் தமிழ் என்பவை முக்கியமானவை. பரணி பாடுவதில் மிகச் சிறந்த சயங்கொண்டார், முதல் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தார். ஒட்டக்கூத்தர் மூன்று உலாக்கள், இரண்டு பரணிகள், ஒரு பிள்ளைத் தமிழ் ஆகிய அரிய நூல்களை இயற்றிய காலம் இதுவே. சேக்கிழார் பெரிய புராணத்தை இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அருளிச் செய்தார். தமிழிலும் சைவத்திலும் மிகுந்த பற்றுள்ளவன் குலோத்துங்கன். சேக்கிழாரையும் அவர் இயற்றிய பெரிய புராணத்தையும் யானையின்மேல் ஏற்றி, தான் அவருக்குப் பின்புறம் இருந்துகொண்டு குடைபிடித்து, ஊர்வலம் செய்வித்தான் அம்மன்னன். இந்தச் செயலால் அவனுடைய தமிழன்பும் சைவ பக்தியும் புலனாகின்றன.

மிகச் சிறந்த காவியமாகிய கம்பராமாயணம் இடைக்காலச் சோழர் காலத்தில்தான் தோன்றியது.

இலக்கிய வளம் மிகுந்த இந்தக் காலத்தில் சோழ நாட்டில் ஒட்டக்கூத்தர் தோன்றினார். தோன்றிப் புலமை பெற்று, மூன்று தலைமுறைகள் கவியரசு செலுத்தினார். செழிப்பு மிகுந்த நாட்டில் தமிழ்ப் பற்று வாய்ந்த அரசாட்சியில் கூத்தர் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, சைவப் பழமாகத் திகழ்ந்து, சிறந்த நூற்பணி செய்தமை பாராட்டத்தக்கது.

3. கூத்தர் பிறந்த ஊர்

தமிழ்ப் புலவர்களில் பலருடைய வரலாறு நமக்குத் தெரியவில்லை. அவர்களின் இயற்பெயர், பிறந்து வாழ்ந்த ஊர் முதலியனவும் அப்படியே. ஒருவருடைய வரலாற்றை எழுதுவதற்கு அவருடைய நூல்களின் அகச் சான்றுகள் அதிகம் கிடைப்பதில்லை. அவரைப்பற்றிப் பிற்காலத்தில் சிலர் புனைந்து கூறும் கதைகள் பல, உண்மைக்கு மாறுபட்டவை. படிப்போருக்குச் சுவை தோன்றுமாறு பல செய்திகள் பிற்காலப் புலவர்களால் படைக்கப்பட்டுவிட்டன. இவை தனிப் பாடல்களாக நமக்குக் கிடைத்துள்ளன. எனினும் உண்மைச் சரித்திரத்தை ஆராய இவை தக்க ஆதாரமாக மாட்டா. செவி வழிச் செய்திகளாக வந்த சிலவற்றைப் பிற்காலத்தார் தமிழ் நாவலர் சரிதை, புலவர் புராணம், விநோத ரச மஞ்சரி போன்ற நூல்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகளும் தக்க சான்றுகள் என்று கொள்ள இயலவில்லை.

ஒட்டக்கூத்தரின் வரலாற்றைப் பொறுத்த மட்டில் அவருடைய நூல்களில் அகச் சான்றுகள் பல உள்ளன. எனினும் அவர் பிறந்த ஊர், அவரது பெயர் இவைகளைப் பற்றி நாம் ஆராயும்போது தனிப்பாடல்களும் செவி

வழிச் செய்திகளிற் பலவும் அகச் சான்றுகளுக்கு வேறு பட்டனவாக உள்ளன என்பதை நாம் அறியலாம். வேறுபாடான இந்த அபிப்பிராயங்களில் எதனைக் கொள்ளுவது, எதனைத் தள்ளுவது? அனைத்தையும் அப்படியே காட்டுவதே எழுதுவோரின் கடமையாகும்.

ஒரு புலவர், பெண்களின் நோக்கையும் (கண்களையும்) கூத்தரின் வாக்கையும் சிலேடையாகச் சித்திரித்திருக்கிறார். மாதரின் நோக்கு, செவிகளை அளக்குமாம். செவிகள் கூத்தரின் வாக்கை அளக்குமாம். இவை இரண்டும் சிந்தையில் நின்ற அளவில் இன்பம் நிறைக்குமாம். மகளிருடைய கண்கள் அவர்களுடைய செவி வரையில் ஓடி அகன்றிருக்குமாம். கூத்தரின் வாக்கின் தன்மையை அறியும்பொருட்டு, மக்களுடைய செவிகள் அதனை அளந்து பார்க்குமாம். மகளிர் நோக்கு ஒருவருடைய மனத்தில் இன்பத்தை நிறைப்பதுபோல் கூத்தரின் வாக்கும் அதைப் பெற்றோனின் உள்ளத்தில் இன்பத்தை நிறைக்குமாம். இந்த விதம் கூத்தரைப் புகழ்ந்த புலவர் அவரை, 'மலரி வருங் கூத்தன்' என்கிறார். இதன் பொருள், மலரி என்ற ஊரில் பிறந்த கூத்தர் என்பதாகும்.

வேறு ஒரு செய்யுளில், 'காழி ஒட்டக் கூத்தன்' என்ற தொடர் காணப்படுகின்றது. சீகாழியில் பிறந்த ஒட்டக்கூத்தர் என்பது இந்தத் தொடரின் பொருள். சீகாழி என்பது திருஞான சம்பந்தர் அவதாரம் செய்த தலமாகும். கூத்தருக்குச் சீகாழியினிடத்தும் அங்கே தோன்றிய சம்பந்தப் பெருமானிடத்தும் அன்பு மிகுதியாக

இருந்தது. தக்கயாகப் பரணியில் திருஞான சம்பந்தருடைய சரித்திரத்தை இவர் கூறியுள்ளார்.

கூத்தர், சீகாழியைச் சேர்ந்தவர் என்பதற்குக் 'காழி ஒட்டக்கூத்தன்' என்னும் தொடர் தக்க ஆதாரமாகாது. ஏனெனில் அந்தத் தொடர் பல சுவடிகளில், 'காளி ஒட்டக்கூத்தன்' என்றே காணப்படுகிறது. இந்தப் பாட பேதத்தின்படி, 'காளி என்ற புலவரும் ஒட்டக்கூத்தரும்' என்றே இந்தத் தொடருக்குப் பொருள் கொள்ள வேண்டும். ஒட்டக்கூத்தர் காலத்தில் **நம்பி காளியார்** என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவர் பெயரைத்தான் இந்தத் தொடர், காளி என்று சுருக்கமாகக் கூறுகிறது. இப்புலவரைப்பற்றி வேறோர் இடத்தில் கூறுவோம்.

தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் என்ற ஊருக்கு அருகில், கூத்தனூர் என்று ஓர் ஊர் அரிசிலாற்றங் கரையில் உள்ளது. ஒட்டக்கூத்தருடைய ஊர் இதுதான் என்பர் சிலர். இது கூத்தர் பிறந்த ஊர் அன்று. சோழ மன்னரால் கூத்தருக்குப் பிற்காலத்தில் மானியமாக வழங்கிய ஊரே இது. இங்கே ஒட்டக்கூத்தர் தம் வழிபடு தெய்வமாகிய கலைமகளுக்கு ஒரு கோயிலை அமைத்துச் சில ஆண்டுகள் தாமும் தங்கியிருந்தார் என்று கூறுதல் பொருந்தும். கூத்தர் கட்டுவித்த கோயில் இன்றும் இங்கே உள்ளது.

ஒட்டக்கூத்தர் என்ற ஒருவர் பிறந்த ஊர் **மணவை** என்று ஒரு செய்யுள் கூறுகிறது. இக்காலத்தில் இது மணக்குடி என்று வழங்குகிறது.

'பெரிய மரங்கள் ஏழும் ஒரே அம்பினுல் துளைபடும் படி எய்த இராமபிரானுடைய தூதாகிய கவி ஒரு கடலைத்தான் கடந்தது; மணவைத் தலைவனுகிய கூத்தனுடைய கவி ஏழு தளைகளையுடைய பாதங்களுடன் ஏழு கடல்களையும் தாண்டி, அப்பால் சென்றது' என்பது அப் பாடலின் பொருள். கவி என்ற சொல் குரங்கையும் செய்யுளையும் குறிக்கும். தளை என்பது காலுக்கிடும் விலங்கு என்றும் சீர்களாலாகிய இயற்சீர் வெண்டளை முதலிய தளைகள் என்றும் பொருள்படும். இந்த மணவைக் கூத்தர் வேறு, ஒட்டக்கூத்தர் வேறு; ஏனெனில் மணவை என்பது தொண்டை நாட்டைச் சேர்ந்த ஊர்; சோழ நாட்டை அன்று.

இங்ஙனம் பலர் பலவகையாகக் கூறும் செய்திகளைக் கொண்டு ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர் எது என்று முடிவு கட்டுதல் எளிதன்று. அது சீகாழியோ மணக்குடியோ கூத்தனூரோ மலரியோ எதுவாயினும், இவையெல்லாம் சோழ மண்டலத்தில் உள்ளனவே. ஆகவே கூத்தர் பிறந்து வளர்ந்தது சோழ மண்டலம் என்று பொதுப்படத் துணிந்து கூறலாம்.

4. பெயர்க் காரணம்

சிதம்பரத்திலுள்ள நடராசப் பெருமானுக்குக் கூத்தர் என்ற பெயர் ஒன்று வழங்குகிறது. 'கூத்தன் குணம் பரவி......பொன்னூசல் ஆடாமோ!' என்று நடராசரை இந்தப் பெயரால் மாணிக்க வாசகர் திருவாசகத்தில் குறித்திருக்கிருர். சைவ சமயத்தில் பற்றுடைய ஒட்டக் கூத்தரின் பெற்ருேர்கள் அவருக்குத் தம் வழிபடு கடவுளாகிய கூத்துடையான் பெயரைப் பிள்ளைத் திருநாமமாகச் சூட்டிஞர்கள். கூத்தர், கூத்த முதலியார் என்றே சில நூல்கள் இவர் பெயரைக் குறிக்கின்றன. முதலியார் என்ற பெயர் இவர் பிறந்த செங்குந்த முதலியார் மரபிஞல் தோன்றியது.

கூத்தர் என்ற பெயர், நாளடைவில் ஒட்டக்கூத்தர் என்று விரிந்ததற்கு அறிஞர், பல காரணங்களைக் கூறுவர். அவை வருமாறு :

தம்மை அவைப் புலவராக்கி ஆதரித்த விக்கிரம சோழன்மீது கூத்தர் ஓர் உலா நூலைப் பாடிஞர். ஒரு தலைவன் உலா வரும்போது அவனைக் கண்டு ஏழு பருவ மகளிர் தனித்தனியே தம் விருப்பங்களைக் கூறுவது போல் கலிவெண்பாவால் பாடும் நூல், உலா எனப்படும். விக்கிரமன் கூத்தர் தன்மீது பாடிய உலாவைக் கேட்டு,

அதில் அமைந்துள்ள நயங்களை அறிந்து, பெரிதும் மகிழ்ந்தான். அந்நூலில் ஒரு கண்ணி*, வேந்தனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஈந்தது. அதனைக் கண்டு அவன் கூத்தரை நோக்கி, "புலவர்க்கரசே! இந்தக் கண்ணியை ஒட்டி, ஒரு வெண்பாவைக் கூறுங்கள்" என்று வேண்டினன். அவன் விருப்பப்படி கூத்தர், வெண்பா ஒன்றைப் பகன்றார். ஒரு கண்ணியை ஒட்டி, ஒரு பாடல் பாடிய காரணத்தால் புலவர் ஒட்டக்கூத்தர் என அழைக்கப் பெற்றார். இப்படி ஒரு சாரார் கூறுவர்.

வேறொரு சாரார் ஒட்டக்கூத்தர் என்ற பெயருக்குக் கூறும் சான்று இதனைவிட விந்தையானது. கூத்தர் இளமையிலேயே கவி பாடுவதில் மிகுந்த திறமை வாய்ந்தவர். அவருடைய கவிகளில் மிடுக்கும் சந்தமும் பொருட் செறிவும் காணப்படும். தாம் செய்யும் கவிகளிலும் தம் புலமையிலும் அவருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. இந்த நம்பிக்கையினால் அவர் புலவர்களை வாதுக்கு அழைத்தாராம். அவர்களுடன் வாதிடும் போது பந்தயம் வைத்ததுண்டாம். பந்தயம் என்பதற்கு ஒட்டம் என்ற வேறு பெயரும் உண்டு. ஒட்டம் வைக்கும் இயல்பினால் கூத்தர் ஒட்டக்கூத்தர் என்று அழைக்கப்பட்டாராம்.

ஒட்டக்கூத்தர் என்ற பெயருக்கு மற்றொருவர் கூறும் காரணம் மேலே கூறிய இரண்டினும் மிக மிக விந்தையானது. செங்குந்தர் புராணம் என்று தமிழில் ஒரு நூல் இருக்கிறது. செங்குந்தர் மரபைச் சேர்ந்த ஒட்டக்கூத்தரை அந்த நூல் மிகவும் பாராட்டுகிறது.

* கண்ணி என்பது இரண்டடிகளைக் கொண்ட தொடர்.

அதில் வரும் ஒரு வரலாறு பின்னே காட்டப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் சில செங்குந்த உபகாரிகள், கூத்தரைச் சந்தித்துத் தம் குலத்தின் அடையாளமாகிய ஈட்டி என்னும் ஆயுதத்தைப்பற்றி ஒரு நூல் செய்யுமாறு வேண்டினர். ஈட்டி என்பதற்குக் குந்தம் என்ற பெயரும் உண்டு. செங்குந்தர் என்ற சாதிப்பெயர் குந்தம் என்ற சொல்லால் தோன்றியது. கூத்தர், தாம் கற்ற கல்வியின் பெருமையினுல் சாதி, மத, தொழில் வேற்றுமைகளேக் கடந்து நின்றவர். ஆதலால் அவர் அப்படி ஒரு நூலைச் செய்ய விரும்பவில்லை. வந்தவர்கள் மேலும் மேலும் அவரைப் பணிந்து வேண்டினுர்கள். கூத்தர் அவர்களது உள்ளன்பைச் சோதிக்க எண்ணி, அவர்களே நோக்கி, "அன்பர்களே! நான் ஈட்டி எழுபது என்ற நூலைப் பாடுகிறேன். மனிதருடைய தலைகளாலான ஒரு குவியலின்மேல் வீற்றிருந்து, நான் அதனைப் பாட வேண்டும். ஆகையால் நீங்கள் எழுபது பேருடைய தலைகளை அறுத்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறினுர். வந்தவர்கள் அவருடைய கட்டளையின்படி எழுபது சிரங்களைக் கொண்டு வந்து, அரியாசனம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார்கள். கூத்தர் அதன்மேல் வீற்றிருந்து, தேவியை வாழ்த்திய பிறகு, ஈட்டி எழுபதைப் பாடினுராம். பாடுங்கால் ஒவ்வொரு பாட்டு முடிந்தபோதும் அறுபட்ட ஒவ்வொரு தலையும் அதன் அதனுக்குரிய முண்டத்தோடு ஒட்டிக் கொண்டதாம். பிறகு வெட்டுண்ட மனிதர் உயிர் பெற்றெழுந்தனராம். அறுபட்ட தலைகளை ஒட்டச் செய்து, இறந்தவர்களை எழுப்பிய காரணத்தால் கூத்தர், ஒட்டக்

கூத்தர் என்று பெயர் பெற்றாராம். குல அபிமானத்தி னால் நரர்களுடைய தலைகளை அளித்த செங்குந்த உபகாரி களை வியந்து, கூத்தர் பாடியதாக ஒரு செய்யுள் வழங்கு கிறது.

> "நிலைதந்தார் உலகினுக்கே யாவருக்கும்
> அபிமானம் நிலைக்கத் தந்தார்;
> கலைதந்தார் வணிகருக்குச் சீவனம்செய்
> திடவென்றே கையில் தந்தார்;
> விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்தர்
> என்கவிக்கு விலையா கத்தான்
> தலைதந்தார் எனக்கொட்டக் கூத்தனெனும்
> பெயரினையும் தாம்தந்தாரே"

என்பது அது. 'செங்குந்தர்கள் இந்த உலகை நிலைக்கும் படி செய்தார்கள். யாவருக்கும் (ஆடைகளை உதவி) மானத்தைக் கொடுத்தார்கள். வணிகருக்குச் சீவனம் செய்யும் பொருட்டுத் துணிகளைக் கொடுத்தார்கள்; நான் பாடிய தமிழுக்கு விலையாகத் தலைகளைத் தந்தார்கள்; (இதன்மூலம்) எனக்கு ஒட்டக்கூத்தர் என்னும் பெயரையும் தந்தார்கள்' என்ற பொருளையுடையது இந்தச் செய்யுள்.

போலிப் புலவர்களை ஒட்டக்கூத்தர், வாதில்வென்று சிறைப்படுத்துவாராம். விஜயதசமியன்று அவர்களைச் சிறையினின்றும் அழைத்து, மறுபடியும் வாது செய்வா ராம். அப்பொழுதும் அவர்கள் தோற்பராயின் தோற்ற வர்களில் இருவர் தலைகளை ஒன்றாக முடிந்து, காளிக்குப் பலி கொடுப்பாராம். காளியின் அருளால் வெட்டுண்ட வர்கள் பிழைத்துவிடுவார்களாம்.

கூத்தர், தலைகளை வெட்டிய செயலைக் குறித்து வேறு வரலாறுகளும் உள்ளன. ஒட்டக்கூத்தர், மனிதர்களுடைய தலைகளை வெட்டுவதைக் கேட்ட மக்கள் அச் செயலுக்கு ஆற்ருது வருந்தினர். பாண்டியனும் சேரனும் ஒட்டக்கூத்தரின் இந்தக் கொடிய செயலை விலக்குமாறு சோழனுக்குத் தம் வேண்டுகோளை விடுத்தனர். சோழன் சினங்கொண்டு, கூத்தரை வாளால் வெட்ட நாலைந்து அடி எட்டிவைத்து நடந்தான். அதனைக் கண்ட கூத்தர், "களங்கமற்றவனே, மகா பலிபால் நீ மூன்றடி மண் பெற்று, உலகங்களை அளந்தது இரண்டடிகளால் அன்ருே! மூன்ருமடிக்கு இடம் இல்லாமற் போயிற்றே! அன்றையினும் இன்று உலகம் அகன்றுவிட்டதோ! அல்லது கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்து, நீ அதிக அடிகளால் அளப்பதற்கு உலகைத் திருத்திக்கொண்டாயோ! நாலைந்தடி நடக்கக் காரணம் யாது?" என்று கூறினராம். திருமால் அம்சமாகிய அவன், தம்மைக் கொல்லவருவது தவறு என்பது இதன் குறிப்பு. கூத்தர், இங்ஙனம் கூறவே சோழன் அவரது கவிநயத்தில் ஈடுபட்டுத் தன் செயல் ஒழிந்தான் என்பர்.

நெற்குன்ற வாணர் என்னும் உபகாரி ஒருவர், தமிழ்ப் புலமைபெற்று, அக்காலத்தே விளங்கினர். அவர் கூத்தரின் செயலைத் தடுக்க அப்புலவர் பெருமானுக்கு ஒரு செய்யுளை எழுதியனுப்பினராம்.

'பெரிய சக்கரவர்த்தியைக் கண்டு அஞ்சி, சிற்றரசர்கள் கடலில் போய் ஒளிந்துகொள்ளவில்லை. தாமரை மலர்வதைக் கண்டு அற்பமாகிய கொட்டியும் பூவாமல்

இருக்கவில்லை. விண்ணுலகிலுள்ள கற்பகச் சோலையைப் போன்ற கைகளை உடைய கவிச்சக்கரவர்த்தியே, உன் கட்டுரையாகிய செய்யுட்களைக் கண்டு பிற புலவர்கள் ஒளிந்துகொள்வார்களோ!' என்ற பொருளையுடையது அந்தக் கவி. இதன் குறிப்பு, 'நீ அவர்கள் தலையை வெட்டவேண்டாம்' என்பதாகும். கற்பகத்தைப் போன்ற கொடைக் குணமுள்ளவர் கூத்தர் என்று கூறி நெற்குன்றவாணர் பகைக் கவிகளுக்கு உயிர்ப் பிச்சை தருமாறு இந்தக் கவியில் வேண்டியிருக்கிறார்.

இந்தச் செய்திகளெல்லாம் நூல்களில் இடம் பெற்றுள்ளனவேனும் நம்பத் தகுந்தன அல்ல.

ஒட்டக்கூத்தர் என்ற பெயருக்கு, மேலே கூறிய காரணங்கள் எல்லாம் பொருத்தமாகவே தோன்றுகின்றன. எனினும் இவற்றுள் ஒன்றுதான் மெய்யாக இருக்க முடியும். மற்றவை பிற்காலத்தாரின் கற்பனையே. புனைந்துரைகளாக உள்ள கற்பனைக் காரணங்களும் ஒட்டக்கூத்தரின் சிறப்பைப் புலப்படுத்தவே தோன்றியிருத்தல் வேண்டும்.

5. செல்வியின் திருநோக்கு

இளமையிலே கூத்தர் விக்கிரம சோழனுடைய அன்புக்கு உரியரானார். அவருடைய புலமையில் மன்னன் சொக்கிப் போய்விட்டான். அவருடைய ஒழுக்கமும் நேர்மையும் சிவபக்தியும் விக்கிரமனைக் கவர்ந்தன. இந்த நிலையில் ஒட்டக்கூத்தர் விக்கிரமன் அவையில் இருந்த புலவர் குழாத்துக்குத் தலைவரானார்.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் முற்றும் முறியடிக்கப்பட்ட கலிங்கர்கள் விக்கிரம சோழன் காலத்தில், சோழரைப் பழி வாங்கும்பொருட்டுப் போர் தொடுத்தனர். அதனைக் கண்ட விக்கிரமன் கலிங்கத்தின் மேல் படையெடுத்துச் சென்றான். சோழர் படைகளால் கலிங்கம் முறியடிக்கப்பட்டது.

• விக்கிரமன் வாகை மாலை சூடித் தன் நாடு திரும்பினான். அவனது இந்த வெற்றியைக் குறித்து ஒட்டக்கூத்தர் அவன்மீது ஒரு பரணி நூலை இயற்றினார். கலிங்கத்தில் சூடிய வாகை மாலையோடு விக்கிரமன், கூத்தர் சூட்டிய புகழ் மாலையையும் கொண்டு பொலிவு பெற்றான். பிறகு கூத்தர், அவன்மீது ஓர் உலாப் பிரபந்தத்தைப் பாடினார். மக்கள் அரசரைத் திருமாலின் அம்ச

மாகக் கருதிப் போற்றிய காலம் அது. அந்தக் காலமர பின்படி கூத்தர் தெய்வத்தின்மேல் பாடக்கூடிய உலாவை அரசனுகிய விக்கிரமன் மேல் பாடியதில் தவ றென்றுமில்லை.

ஒட்டக்கூத்தர் உலாவை எழுதி முடித்தபின் சோழன் பல புலவர்களை வருவித்து, அவர்களிடையே நடுவில் உயரிய ஆசனம் அமைத்து, ஒட்டக்கூத்தரை வெள்ளை உடையினுலும் அணிகளாலும் அணிவித்து அதில் அமரச் செய்தான். அவர் பாடிய உலாவை உயர்ந்த தவிசின்மேல் வைத்து, வெள்ளை மலர்களால் பூசித்து, அதனை அரங்கேற்றுமாறு கூத்தரை வேண்டி னன். விக்கிரம சோழனுலா அரங்கேற்றம் இனிது நிறை வேறியது. கூத்தரின் வாக்கைக் கேட்டு வியந்து, அவை யில் இருந்தோர் யாவரும் அவரைப் போற்றினர்.

விக்கிரமன் கூத்தருக்குப் பட்டு, பொன்னுடை, கடுக்கன், தோள்வளை, விலையுயர்ந்த மணியாரங்கள், சுவடி களை வைக்கும் பஞ்சரப் பெட்டி முதலியவைகளைப் பொன்னெடும் நிலங்களுடனும் வழங்கி, அவரைச் சிறப் பித்தான். அந்தப் பரிசில்களை ஏற்றுக்கொண்ட கூத்தர், 'வறுமைப் பிணியால் துன்பமுற்று உழன்ற எனக்கு விக்கிரம சோழன் உடுக்கவும் தொடுக்கவும் முடிக்கவும் கவிக்கவும் படுக்கவும் சூடவும் அணியவும் பயன்படத் தக்க அரிய பொருள்களை வழங்கி என் கலியை ஒட்டி னன்' என்ற கருத்துத் தோன்ற அவனைப் புகழ்ந்து பாடி னர். அன்று முதல் கூத்தர் திருமகளின் கடைக்கண் நோக்கத்தைப் பெற்று, செல்வத்தில் திளைத்து விளங் கினர்.

கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருவர் பால் ஒருங்கே அமைவது அரிது என்பர் ஆன்ருேர். ஒட்டக்கூத்தர் இதற்கு விலக்கானவர். தம் இஷ்ட தெய்வமாகிய கலைமகளோடு ஆக்கம் தரும் செல்வியாகிய திருமகளையும் தக்கயாகப் பரணி என்ற நூலில் வாழ்த்தி யிருப்பது அவர் செல்வப் பெருக்கில் வாழ்ந்தமையைக் காட்டும்.

முதற் குலோத்துங்கன் வேங்கை நாட்டிலிருந்து வந்தவன். அவன் தாய்மொழி தெலுங்கு. அவனுடைய பாட்டியும் தாயும் தாரமும் சோழ மரபைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள். பெண் வழியில் மூன்று தலைமுறைகள் தமிழோடு தொடர்பு பெற்ற குடியில் தோன்றிய குலோத்துங்கனுக்குத் தமிழ் மொழியில் பயிற்சி இருந்தது. அவன் மகன் விக்கிரமன் தமிழ் நாட்டிலேயே இருந்து, வளர்ந்து, அரசு பெற்றவன். ஆதலின் தமிழில் ஓரளவு புலமை பெற்றிருந்தான். தமிழிலுள்ள அரிய நூல்களை அவன் புலவர் வாயால் கேட்டுக் கேட்டுத் தமிழருமையை நன்கு உணர்ந்திருந்தான். அதனுல் அவன் தன் மகன் குலோத்துங்கனுக்குத் தமிழ்க் கல்வி கற்பிக்குமாறு ஒட்டக்கூத்தரை நியமித்தான். குலோத்துங்கன் சிறு வயதிலேயே ஒட்டக்கூத்தரை ஆசிரியராகக் கொண்டு, தமிழ் மொழியை முற்றக் கற்றுத் தேர்ந்து, புவிக்கரசராக விளங்குவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே கவிக்கரசனுன். அவன் கூத்தரைத் தன் ஞான பிதாவாகக் கருதினுன். அருச்சுனனுக்குத் துரோணரிடமிருந்த அளவு குரு பக்தி குலோத்துங்கனுக்கு ஒட்டக்கூத்தரிடம் இருந்தது. மற்ற மாணவர்களைவிட அருச்சுனனைத் துரோணர்

விரும்பி நேசித்தவாறு, கூத்தர், தம் மாணுக்கர் யாவரினும் குலோத்துங்கனை மிகுந்த அன்போடு நேசித்து வந்தார். 'நெஞ்சுற அருங்கலைகள் கற்பவர்கள் தம்முடனே நேயம் மகிழாதவர்கள் யார்?' என்பது ஆன்ருேர் வாக்கன்ருே !

பிற்காலத்தில் குலோத்துங்கன் முடி சூடிச் செங்கோல் ஓச்சிய சமயம், அவன் பேரவையில் கூத்தருக்கிருந்த மதிப்பும் செல்வாக்கும் வேறு எவருக்கும் இருக்கவில்லை. அடுத்த அத்தியாயத்தில் கண்ட நிகழ்ச்சி இதனைப் புலப்படுத்தும்.

6. அன்ெறொரு நாள்

அன்று குலோத்துங்கனுக்குப் பிறந்த நாள். விமரிசை யாக விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் நடை பெற்றன. பல நதிகளும் ஒருமுகமாகக் கடலை அடைவது போலப் பல மன்னர்களும் சோழ நாட்டுத் தலைநகரில் கூடினர். நகரெங்கும் கொடை முரசின் பேரொலி எட் டுத் திக்கினும் அதிர்ந்தது. மங்கல மங்கையர் மனம் மகிழ்ந்தனர்; தொங்கலணிந்த வீர மைந்தர்கள் உளம் களித்தனர்; பொங்குதமிழ்ப் புலவர்கள் புலமை காட்டச் சந்தர்ப்பம் வந்ததே என்று மனம் நிறைந்தனர்.

மன்னன் பிறந்த நாளைத் தங்கள் வாழ்க்கை வழி திறந்த நாளாகச் சிறையில் உள்ளவர்கள் கருதினர். கார ணம் அவர்கள் மன்னன் பிறந்த நாள் விழாவை முன் னிட்டுச் சிறைவீடு பெற்றதுதான்.

இத்தகைய நிலையில் பிறந்த நாள் விழா சிறந்த விழா வாக அமைவதைக் கேட்கவும் வேண்டுமா!

அரண்மனையிலே மன்னன் குலோத்துங்கன், மஞ்சன நீராடி, மணம் கமழும் வெண்சாந்து பூசி, வெள்ளிய புத்தாடைகள் அணிந்தான். தென்கடல் முத்தும் கீழ்

கடல் பவளமும் அவன் மேனியை அணி செய்தன. பொதியிலில் தோன்றிய சந்தனக் கட்டைகளின் நறு மணப் புகை, அத்தாணி மண்டபமெங்கும் கமழ்ந்தது. அடுத்தபடியாக அரசனுடைய செயல், தங்கள் குலக் கொழுந்தான பிறையணிந்த இறைவனுகிய நடராசப் பெருமானை வணங்குவதே. கலை வளர்க்கும் காவலன், கலை வடிவான பெருமானைப் பணிவது பொருத்தமுடை யதுதானே? மாற்ருருக்குப் பணியாத அவனுடைய தலை முக்கட் செல்வன்முன் பணிந்தது. பகைவர்களால் போற்றப்படும் பார்த்திபன், பெருமானைப் போற்றினுன். திறைப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் மன்னன், நிவேதனப் பொருள்களை இறைவனுக்கு அர்ப்பணித் தான்.

இந்த நிலையிலே, தான் செய்ய வேண்டிய அடுத்த செயலையும் அவன் மறக்கவில்லை. மனிதருள் மாணிக்க மாக - மக்களின் தலைவனுக - மதிப்பிற்குரிய அறிஞனுகத் தன்னை ஆக்கிய ஆசிரியர் பிரான் ஒட்டக்கூத்தரைப் போற்றுவது தன்னுடைய கடமை என்பதை அவன் அறிந்தான். மாபெரும் சோழப் பேரரசை ஆளும் உரி மையைப் பிறந்த குலத்தினுல் பெற்றுவிடலாம்; அயலாரின் படையெடுப்பைக் கடலொத்த படைகளால் தடுத்து விடலாம். ஆனுல் ஒரு பகையை மட்டும் ஒட்ட அறிவு அவசியம். அதுதான் அறியாமை என்னும் பகை. அறி யாமை இருக்குமானுல் அரும்பாடுபட்டுப் பெற்ற பேரரசு, ஒரு நொடியில் மாய்ந்துவிடும். அத்தகைய பகையை ஓட் டப் புவிச்செல்வத்தை மட்டுமன்றிக் கவிச்செல்வத்தையும் குலோத்துங்கன் அடையும்படியாகச் செய்தவர் ஒட்டக்

கூத்தரே. எனவே அவருக்கு ஏற்ற வரிசைப் பொருள்களைக் காவலர் வசம் அனுப்பக் குலோத்துங்கன் தவறவில்லை.

கூத்தருக்கு வரிசைப் பொருள்களை அனுப்பிய பிறகு மன்னன் அவையை அடைந்தான். அரியணையில் அமர்ந்த அரசன், சுற்றிலும் தன் பார்வையைச் செலுத்தினன். ஆடும் விறலியர்களும் பாடும் பாணர்களும் ஒருபால் அமர்ந்திருந்தனர். கவிபாடும் புலவர்கள் ஒரு பக்கமும் புவியாளும் சிற்றரசர் மற்ெருரு பக்கமும் வீற்றிருந்தனர். அரசவை முழுவதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி யிருந்தது.

இப்பொழுது புலவர்கள் மன்னனை வாழ்த்தும் கட்டம். தங்கள் புலமையை நாட்டும் சந்தர்ப்பத்தைப் பெற அவர்கள் தவறவில்லை. சோழ நாட்டைப் பாடினர் சிலர்; சோழர் பரம்பரையைப் பாராட்டினர் சிலர்; சோழ மன்னனைப் புகழ்ந்தனர் மற்றும் சிலர். தன் புகழ் கேட்கப் படும் சமயத்தில் தன்னடக்கத்தை மன்னன் வெளிக் காட்டினன்.

இவ்வளவு மகிழ்ச்சிகரமான விழாவில் அரசரின் கண்கள் வேறு எவரையோ தேடின. ஆம்; அது உண்மையே. ஒட்டக்கூத்தரையே அவன் கண்கள் துருவித் தேடின. ஆனல் எல்லோர்க்கும் முதலாவதாக இருக்கும் இருக்கை, இன்று வெற்றிடமாக இருந்தது. முதல் வரிசையில் அவர் காணப்படவில்லை. மக்கள் கூட்டம் நிரம்பி யிருந்தது. அதற்கிடையில் புலவரைக் கண்டு பிடிப்பது கடினந்தான்.

பலரும் புகழும் புகழ் மொழியில் அரசனுடைய மனம் செல்லவில்லை. அவற்றை ரசிப்பதாக அவன் காட்டிக்கொண்டானே தவிர உண்மையில் அவனுடைய நாட்டம் ஒட்டக்கூத்தரையே தேடிற்று. எல்லோருடைய புகழ் மொழிகளும் ஒரு விதமாக முடிந்தன. இன்னும் யாரேனும் பாடுவாரோ என ஒருவர் மற்ரெருவரைப் பார்த்துக்கொண் டிருந்தனர். அதற்கிடையில் கூட்டத்தினர் பலவாருகப் பேசிக்கொண்டனர்.

" ஆமாம், எல்லோருக்கும் தலைமை வகிக்கக்கூடிய புலவர்பிரான் ஒட்டக்கூத்தரைக் காணேமே ? " என்ருர் கூட்டத்தில் ஒருவர்.

" அவருக்கு உடல்நிலை சற்று நலமற்றிருப்பதாகக் கேள்வி. "

" எப்படியும் இதில் கலந்துகொள்ளாமல் அவர் இருக்கமாட்டாரே. அவர் படைத்த கொழுந்துதானே நம் மன்னர். "

" உண்மையே, கவியென்ருல் அவருடைய கவியை அல்லவா கேட்க வேண்டும்! "

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண் டிருக்கையில் மகிழ்ச்சி ஆரவாரம் திடீரென்று அடங்கி, அமைதி காணப்பட்டது. இந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒரு குரல் கம்பீரமாக வெளிப்பட்டது.

" ஆடும் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடும் குடையில் தரித்தபிரான்..... "

என்ற இரண்டடிகள் அவையோரின் உள்ளத்தை ஈர்த்தன. அதைப் பாடுவார் யார் என்று அறிய எல்லோரு

டைய கண்களும் அவரைத் தேடின. ஆனால் ஆள் யாரென்று தெரியவில்லை.

அவையோர் திகைத்தாலும் அரசன் இப்பொழுது திகைக்கவில்லை. ஒரு நொடியில் பாடுபவர் யார் என்பதை அவன் அறிந்துகொண்டான். உருவத்தைக் கொண்டு அவன் அறியவில்லை. குரலைக் கொண்டே அறிந்தான். அவ்வளவு கம்பீரமாக அழகான சொற்களைப் போட்டுப் பாடக் கூடியவர், ஒட்டக்கூத்தர் ஒருவரே என்பது அவனுக்குத் தெரியும். அதுவும் தவிர, தன்னை மனித உருவாக்கிய ஆசிரியர் பிரானின் குரலை அவன் அறிவது கடினமல்லவே! இவ்வளவும் ஒரு விநாடியில் நேர்ந்தன. முதலில் பாடிய குரல் அடுத்த இரண்டடிகளைப் பாடத் தொடங்குமுன்,

"..............................என்று நித்தநவம்
பாடும் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென் றேஎனைச் சொல்லுவரே."

என்ற குரல் எழுந்தது.

இரண்டாவது குரலைக் கொண்டு அதனைப் பாடிய மன்னனை அவையோர் அறிந்துகொண்டனர். அதுமட்டு மன்று; முதல் குரல் எத்திசையிலிருந்து வெளிப்பட்டது என்பதையும் உணர்ந்துகொண்டனர். காரணம் பின் னிரண்டடிகளைப் பாடிய மன்னன் குலோத்துங்கன் அரியணையினின்றும் இறங்கிக் குறித்த திசையை நோக் கிச் சென்றதுதான். அரசன் செல்லக் கூட்டம் வழி விட்டது.

அங்கு ஒரு மூலையில் ஒட்டக்கூத்தர் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவரது உடல் தளர்ச்சி யுற்றிருந்தது; பெருமூச்சு அவர் உடலினின்றும் எழுந்தது. அரசர் தம்மை நோக்கி வருவதைக் கண்ட அவர், எழ முயன்ருர். ஆனுல் அவர் உடல் எழ மறுத்து விட்டது.

வந்த மன்னன் கூத்தரைப் பணிந்தான். பிறகு அவர் உடலை நோக்கினுன். அவர் உடல் நலக் குறைவுற்றிருப்பதை அறிந்தான்.

“தாங்கள் இல்லாததை நான் அவையில் நுழைந்ததும் பார்த்தேன். தாமரை இல்லாத பொய்கைபோல அவை எனக்குக் காட்சியளித்தது. தாரகைகள் சூழ்ந்த தண்மதியாக அவையில் எப்பொழுதும் நீங்கள் விளங்குவீர்கள். இந்த உடல் நிலையில் தாங்கள் அவைக்கு வருவதைத் தவிர்த்திருக்கலாம்” என்ருன் மன்னன்.

புலவர் பதில் கூற எழ முயன்ருர். ஆனுல் குலோத்துங்கனது கரங்கள் அவர் எழுவதைத் தடுத்தன.

“அரசே! ஆண்டுக்கொரு முறை நிகழும் புனித விழாவைப் புறக்கணிக்கலாமா?”

“புறக்கணிக்கக் கூடாதுதான். ஆனுல் உடல் நிலைக்குப் பிறகுதானே மற்றவை?”

“மன்னரைவிடவா ஒட்டக்கூத்தன் உடல் முக்கியம்?”

“உண்மைதான். மன்னன் நாட்டிற்கு உயிர்போன்றவனே. ஆனால் அவன் உயிர் ஒருவரிடத்தில் அடைபட்டிருக்கிறதே.”

“யார் அவர்?”

“தாங்கள்தான்!”

“வேந்தே! அளவுக்கு மீறிய புகழ்ச்சி இது.”

“இல்லை, இல்லை. இது இயன்மொழிதான். இந்த உடல்நிலையிலும் என்மேல் உள்ள அன்பினால் முன்வந்து என்னைப் புகழ்ந்தீர்கள். முன் வரிசையில் அமர்ந்திருந்தால் உங்கள் உடல்நலக் குறைவின் காரணமாக நான் மனம் வருந்துவேன் என்று மூலையில் வந்து அமர்ந்தீர்கள். உரக்கப் பேசக்கூடாத நிலையில் சபை எதிரொலிக்கும்படி உயர்ந்த குரலில் பாடினீர்கள்.”

“உம் வாயினின்றும் எழுந்த பின்னிரண்டடிகள் என் சிரமத்தைக் குறைத்ததோடு என் புகழ்மொழிக்கும் தடை போட்டுவிட்டனவே!”

“தாங்கள் பெரியவர். கல்விக் கண்ணை எனக்கு அருளிய தந்தை. அப்படிப்பட்டவரைப் பாராட்டிப் போற்றுவது என்னுடைய கடமை. அதை விட்டுத் தாங்கள் என்னைப் புகழ்வது தங்கள் தகுதிக்குக் குறைவானது. நான் விரும்பாததுங் கூட.”

“வாழ்த்துவதில் தவறொன்றும் இல்லையே.”

"இருப்பினும் நான் உங்கள் ஆசியைப் பெற விரும்பியே பின்னிரண்டடிகளைப் பாடினேன்."

"இவ்வளவு விரைவிலே பாடிய பின்னிரண்டு அடிகளிலே சொற்கோவையும் பொருளாழமும் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளன. நீங்கள் புவிச்செல்வர் மட்டும் அல்லர்; கவிச் செல்வருங்கூட."

"எல்லாம் தாங்கள் இட்ட பிச்சைதான்."

இவ்வுரையாடலுக்குப் பிறகு குலோத்துங்கன் ஒட்டக்கூத்தருக்கு ஏற்ற பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தான்.

இதன்பின் பாணர்களும் பொருநர்களும் விறலியர்களும் வீரர்களும் பாவலர்களும் காவலர்களும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்பப் பரிசுகளைப் பெற்றனர். ஒரு தகுதியையும் பெறாத இரவலர்களும் பொருள்களைப் பெற்றுக் களித்துச் சென்றனர். எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் அன்று காணப்பட்டது.

7. கவிச் சக்கரவர்த்தி

பிறந்த நாளில் குலோத்துங்கன் தமக்குச் செய்த சிறப்பினைக் கருதி, ஒட்டக்கூத்தர் அவனுக்கு இந்த உலகில் நிலையான புகழைத் தர எண்ணினார். தம் ஞான புத்திரன் என்பதுபற்றி அவன்மேல் பிள்ளைத் தமிழ் என்னும் நூலை ஒட்டக்கூத்தர் இயற்றினார். பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாக மதித்து, 'இந்தக் குழந்தையைக் காக்க' என்று பல தெய்வங்களை வேண்டிக்கொள்ளும் காப்புப் பருவ முதல் பத்துப் பருவங்களில் அந்தத் தலைவனுக்குரிய இயல்புகளும் பெருமையும் தோன்றப் பாடும் நூல் பிள்ளைத் தமிழ் எனப்படும். குலோத்துங்கனைக் குழந்தையாகப் பாவித்து அந்தக் குழந்தையை இரு கைகளை ஊன்றி, ஒரு கால் மடித்து, மற்றொரு கால் நீட்டி விளையாடும்படியும் மழலை மொழிகளைப் பேசும்படியும் முத்தம் தருமாறும் அருகே தவழ்ந்து வருமாறும் குழந்தைக்கு வேடிக்கை காட்ட அம்புலியை அழைத்தும் சிறுமிகள் தாம் மணலிலே கட்டி விளையாடும் சிறு வீடுகளைச் சிதைக்க வேண்டாமென்று அந்தக் குழந்தையை வேண்டிக்கொள்வது போன்றும் சிறிய கைப்பறையைக் கொட்டும்படியும் சிறு தேரை உருட்டும்படியும் வேண்டுவது போல் பிள்ளைத் தமிழைக் கூத்தர் அழகாகப் பாடி முடித்தார்.

இந்த நூல் குலோத்துங்கனுடைய புகழ் எல்லேக்குப் போதாதென்று, குலோத்துங்க சோழன் உலா என்ற பிரபந்தம் ஒன்றையும் இயற்றினர்.

பிறகு அவர், தாம் இயற்றிய பிள்ளேத் தமிழையும் உலாவையும் அவனது அவைக்களத்தில் அரங்கேற்றினர். சொல்நயம், பொருள்நயம் முதலியன செறிந்த அந்த நூல்களேக் கேட்டோர் கூத்தரின் கவித் திறமையையும் அவருக்குக் குலோத்துங்கன்பாலிருந்த அன்பின் திறத்தையும் வியந்து பாராட்டினர்.

அரங்கேற்றம் முடிந்ததும் குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரை வணங்கி, "அருள் மிகுந்த தந்தையே! அரசர், புலவருக்குத், தரும் பொருள் எல்லாம் புலவர் அரசருக்குத் தரும் பொருளுக்கு ஒப்பாக மாட்டா. மன்னன் தரும் பொருள் விரைவில் அழியக் கூடியது; புலவர் தரும் நூலாகிய பொருளோ இந்த உலகம் உள்ள அளவும் தமிழ் மொழி உள்ள அளவும் நிலேத்திருக்கக் கூடியது. நான்முகன் செய்யும் வெற்றுடம்பு, பிணி மூப்பு முதலியவற்ருல் தளர்ச்சியுற்று விரைவில் அழிந்துவிடும்; புகழ் கொண்டு, புலவர் செய்யும் உடம்புகளாகிய செய்யுட்கள் என்றும் அழிவதில்லே. நீங்கள் எனக்குச் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரம் இல்லே. வான் செய்த நன்றிக்கு வையகம் யாது கைம்மாறு செய்யக் கூடும்! அந்த நன்றி மறவாமல் இருப்பது ஒன்றே தகுந்த கைம்மாறு அன்ருே! பொன்னுல் பிரயோசனம் பொன்னேப் பெற்றவனுக்கு உண்டு; பொன்படைத்தவன் தன்னுல் பொன்னுக்கு என்ன பயன் ஏற்படக் கூடும்! நீங்கள் பொன்; நான் அந்தப் பொன்னேப் படைத்தவன்" என்று கூத்

தரைப் பலவாறு புகழ்ந்து, வணங்கி, அவருடைய ஆசி பெற்ருன்.

பிறகு அவன் தன்னைப் புவிச் சக்கரவர்த்தியாக உரு வாக்கிய கூத்தருக்குக் **கவிச் சக்கரவர்த்தி** என்ற பட்டம் வழங்கினுன். தெய்வத்துக்கும் அரசருக்கும் உரிய மரியா தைப் பொருள்களாகிய சிவிகை, சந்திரவட்டக் குடை, கொடி, ஆலவட்டம், சாமரை, காளம் முதலிய விருது களை அந்தப் பட்டத்திற்கு ஏற்ப அளித்தான். காளம் என் பது சின்னம் என்று வழங்கும் ஒருவகைத் துளைக் கருவி. தெய்வமும் பெரியோரும் பவனி வரும் காலத்தில் காளத்தை ஊதிச் செல்வது, நம் நாட்டில் தொன்று தொட்டு வரும் மரபாகும். காளத்தை விருதாகப் புலவர் பெறும் வழக்கம் பழமையானது. அதனைப் பெற்ற புல வர்கள் காளக் கவி எனப்படுவார். மிகமிக உயர்ந்த புலமைபெற்ற அறிஞருக்கே காளம் வழங்கப்படும். குலோத்துங்கன் அதனைக் கூத்தருக்கு வழங்கி அவரைக் காளக்கவி யாக்கினுன். அன்று முதல் கூத்தர், காளக் கவி என்றும் கவிச் சக்கரவர்த்தி என்றும் எல்லோராலும் மதிக்கப்பெற்ருர்.

உயர்ந்த அந்த விருதுகளைப் பெற்ற ஒட்டக்கூத்தர், 'பெருக்கத்து வேண்டும் பணிவு' என்பதை உணர்ந்து குலோத்துங்கனை நோக்கி,

“ பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொன்தா ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருள்மாறு பரஞ

முத்துப்பந் தரில்நிற்கும் குருளைக்கும் சினவேல்
முருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் பதுமக்
கொத்தற்கும் சடிலக்கொந் தளருக்கும் அல்லால்
கூழைத்தண் தமிழற்கேன் கொடியும்கா ளமுமே!"

என்ற செய்யுளைப் பாடினர். 'பத்துத் திசைகளும் பதறும்படியும் பகிரண்டத்திலுள்ள பசும்பொன்போன்ற நட்சத்திரங்கள் சிந்தும்படியும் மந்தர மலையை மத்தாகக் கொண்டு, பாற்கடலில் அமுதத்தைக் கடைந்த சக்கரப் படையேந்திய திருமாலின் வடிவாகி, மண்ணுலகை உன் வசப்படுத்தி ஆளும் மானத்தை அணியாக உடையவனே! முத்துப் பந்தரில் நிற்கின்ற திருஞான சம்பந்தராகிய பிள்ளையாருக்கும் சினம் பொருந்திய வேலை ஆயுதமாகக் கொண்ட முருகனுக்கும் பொதியிலின் தலைவனுகிய அகத்திய முனிவனுக்கும் தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனுக்கும் சடைமுடியையுடைய சிவபெருமானுக்கும் அல்லாமல் குறைவுடைய தமிழனுகிய எனக்குக் குடையும் காளமும் எதற்கு?' என்பது இந்தக் கவியின் பொருள்.

உடலில் பச்சை இரத்தம் பாய்ந்த இளமையில் கூத்தர் ஒருகால் மிடுக்காக இருந்திருக்கலாம். வயதாக ஆக அடக்கமும் பணிவும் பெற்று, அவர் மனிதரில் தேவராக விளங்கினர் என்பதற்கு அவர் செய்த பாடல்கள் சான்றுகும். அத்தகைய பாடல்களுள் ஒன்று இது.

8. மடையனிடம் பரிவு

புலவர்பிரான் ஒட்டக்கூத்தர் பாராளும் மன்னன் குலோத்துங்கனது உள்ளத்தை ஆண்டு வந்தார். மன்னனே மாபெரும் புலவர் தன் அவையில் இருப்பது தனக்கு மட்டும் அல்லாமல் தன் நாட்டிற்கே பெருமை என எண்ணினன். நாள்தோறும் சுவையான பல செய்திகளை அவர் மூலமாக அறிந்தான். கற்றவர்களே யன்றி மற்றவர்களும் சுவைக்கும் வண்ணம் விஷயங்களை எடுத்துச் சொல்வதில் கூத்தர் சமர்த்தர்.

கூத்தர்பிரான் பாச்சுவையை மட்டுமல்லாமல் நாச் சுவையையும் விரும்பினர். இனிய சுவையான சிறந்த உணவுப் பொருள்களைப் பாங்காக உண்பதில் நாட்டம் உடையவர் அவர்.

தனக்கு ஒய்வு கிடைத்த போதெல்லாம் ஒட்டக் கூத்தரைப் பயன்படுத்திக்கொள்ள மன்னன் தவற வில்லை. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றபடி ஒட்டக்கூத்தரை வேந்தன் மனம் நாடியது. அவரால் புலமை பெற்ற நாம் பின்னும் புலமை பெற வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. அரண்மனையில் தன் பெரும்பொழுதை ஒட்டக்கூத்தருடன் இலக்கிய உரையாடலில் மன்னன் கழித்தான்.

கூத்தருடன் இளமையிலிருந்தே பழகிய மன்னன் அவர் இயல்புகளை நன்கறிந்திருந்தான். சொற்சுவைகளைப் போலவே அறுசுவை உண்டிகளையும் அவர் உள்ளம் நாடு வதை உணர்ந்திருந்தான். எனவே அவருக்கென்று பல சுவையுள்ள சிற்றுண்டிகளை அவ்வப்பொழுது அனுப்பி வைத்தான். சில சமயங்களில் தானும் அவரோடு கூட உண்டான். உண்ணுமுன்பு இருந்ததைவிட உண்ட பின் எழும் உரையாடல் பெரிதும் இன்பம் பயப்பதை இப்பொழுது அவன் அநுபவத்தில் அறிந்திருந்தான். கூத்தருக்கு என்றே சமையற் கலையில் சிறந்த சமையற் காரர் இருந்தனர். சமையற்காரர்களை மடையர்கள் என்று சொல்வது உண்டு. மடைப்பள்ளி என்றால் சமைக்கும் இடம் என்பது பொருள். எனவே மடைப் பள்ளியில் வேலை செய்பவன் மடையன் எனப்பட் டான்.

அரண்மனைக்குச் செல்லாத பொழுது கூத்தர் தம் விடுதியில் பலருக்குப் பாடம் சொல்லி வந்தார். அறிஞர் ஆக வேண்டும் என்னும் அவாவினால் அவ ரிடத்தில் வந்து தங்கிப் பயின்றவர்கள் பலர். வேற்று நாடுகளிலிருந்தும் பலர் வந்திருந்தனர். அவர்களுக்கு ஞானக் கண்ணை நல்கும் பெருமானாக ஒட்டக்கூத்தர் திகழ்ந்தார். பெருஞ் செல்வர்களும் ஒட்டக்கூத்தரிடம் பணிவும் அடக்கமும் காட்டினர்.

அரண்மனையிலிருந்து நாள்தோறும் உணவுப் பொருள்களை ஒட்டக்கூத்தரின் விடுதிக்கு வழக்கமாக ஒருவன் கொண்டு வருவான். அவன் தன் மடைத் தொழில் மூலம் மன்னர் மனத்தையும் மகிழ்வித்தான்.

அவன் கைகளால் படைக்கப்பட்ட உணவு, அமுதம் போன்றிருந்தது. எனவே சிறப்பான விருந்துகளுக்கும் புதியவனையே சமைக்கச் செய்தான் மன்னன்.

ஒட்டக்கூத்தர் விடுதிக்குத் தினந்தோறும் வரும் அம்மடையன், மாணுக்கருக்குக் கூத்தர் பாடம் சொல்லு வதைத் தொலைவிலிருந்து கைகட்டிக் கேட்பான். கேள்வி வாயிலாகவே அவன் ஓரளவு அறிவு பெற்றான். நாமும் இவ்வாறு கற்க இயலவில்லையே என்ற ஏக்கம் அவனுக்கு இருந்தது. இருப்பினும் தான் கொடுத்து வைத்தது இவ்வளவுதான் என்று மன அமைதியோடு இருந்துவிட்டான்.

அவன் வருவதை ஒட்டக்கூத்தர் பார்ப்பார். அவர் முகத்தில் ஒரு குறுநகை தோன்றும். சிறிதே தலையை உயர்த்துவார். பின்பு கண்ணால் சமிக்கை செய்வார். 'மெத்த மகிழ்ச்சி; உணவுப் பண்டத்தை வைத்துச் செல்!' என்ற குறிப்பு அந்தப் பார்வையிலே தோன்றும். சமையற்காரனும் அப்படியே செய்துவிட்டு ஒதுங்கி நிற் பான். ஒட்டக்கூத்தரின் விடுதிக்கு வருவதைத் தனக்குப் பெருமையாக அவன் கருதினான். அவன் முகத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சி ஆனந்த நடமிடும்.

ஒரு நாள் மாலைநேரம். வழக்கமாகச் சமையற்காரன் வந்தான். உணவுப் பொருள்களை வைக்க வேண்டிய இடத்திலும் வைத்துவிட்டான். ஆனால் இன்று அவன் முகத்தில் ஆனந்தத்தின் அறிகுறி காணப்படவில்லை. அதற்குப் பதிலாக, துயரத்தின் சாயல் காணப்பட்டது. ஏதோ ஒரு குறை அவனுக்கு இருப்பதாக முகக்குறிப்புக் காட்டிற்று.

குறிப்புணர வல்ல ஒட்டக்கூத்தர் இதைக் கவனித்தார். ஆயினும் ஒன்றும் கேட்கவில்லை. அவன் ஏதாவது கூறுகிறுனே என்று பொறுத்துப் பார்த்தார். மாணவர்களுக்கிடையே அவர் வீற்றிருந்த சமயம் அது. வந்தவன் தன் குறையைக் கூத்தருக்குக் கூறவேண்டும் என்று நினைத்தான். ஆனல் அவன் அதைத் தெரிவிப்பதற்கு அச்சமடைந்தவனுகக் காணப்பட்டான். சிறிது நேரம் சென்றது. கூத்தர்பிரானே, "உனக்கு மனக்குறை ஏதோ இருப்பதாகக் காணப்படுகிறதே; அது யாது, அப்பனே?" என்று கேட்டார்.

அவர் வினவியதைக் கேட்டதும் வந்தவன் வெலவெலத்துப்போனுன். காரணம், அதுவரையில் கூத்தர் தம் புன்னகைக் காட்டியிருக்கிருரே தவிர அவனிடம் பேசியதில்லை. இப்பொழுது அவர் பேசவே அவன் உடல் நடுக்கம் கண்டது. அப்படியே ஓடி வந்து ஒட்டக்கூத்தர் கால்களில் விழுந்து தன்னைக் காப்பாற்றும்படியாக வேண்டிக்கொண்டான்.

அரண்மனையில் இவன் வேலைக்கு ஏதேனும் தடை ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை விரைவிலேயே புலவர் தெரிந்துகொண்டார். எனவே, "உனக்கு ஏற்பட்ட துன்பத்தையோ குறையையோ நீ தெரிவித்தால் நான் அது தீர்வதற்குரிய வழியைத் தேடுகிறேன்" என்ருர் கவிஞர்.

மடையன் மனக்குறையைத் தெரிவிக்கலானுன்:

"ஐயா! மன்னன் மாளிகையில் தங்களுக்காகவே நான் பணியில் அமர்த்தப்பட்டிருப்பதை அறிவீர்

கள். என் மடைத் தொழிலின் மூலம் மன்னனை நான் மகிழ்விப்பதையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள். பெருவிருந்துகளுக்கும் நான் சமைப்பதோடு தங்கள் விடுதிக்கு வருவதையும், வந்த நான் தங்கள் பாடம் சொல்லும் முறையில் மயங்கி நிற்பதையும் தாங்கள் உணர்ந்திருக்கலாம். தங்கள் விடுதிக்கு வருவதற்கு என்ன பேறு செய்தேனே என்று நான் மனம் மகிழ்வதுண்டு. அதுவே எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் இனி அந்தப் பேறு எனக்குக் கிட்டாது.''

"ஏன்?''

"மன்னர்பிரான் என்னை வேலையிலிருந்து நீக்கி விட்டார்.''

"மன்னரா நீக்கி விட்டார்?''

"இல்லை, அரண்மனை அதிகாரிகள் நீக்கிவிட்டனர்.''

"நீக்கக் காரணம்?''

"என்றும் போல் இன்றும் மன்னருக்குரிய உணவை நான் சமைத்தேன். அரசர் உண்ணும்போது உணவில் இரண்டொரு கற்கள் கலந்திருப்பதைக் கண்டார். 'கல் கறிக்க இப்படிச் சமைப்பதா?' என்று மன்னர் கூறினர். கற்கள் உள்ள பகுதியை அவர் ஒதுக்கிவிட்டார். அரண்மனை அதிகாரிகள் அதற்காக என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள்.''

"மன்னர் உணவில் கற்கள் இருக்கும்படியாகச் சமைத்தது குற்றந்தானே?''

"குற்றம் என்பதை நான் அறிவேன், அண்ணலே! ஆனால் அதற்குக் காரணம் கீழிருக்கும் பணியாளர்களே. அவர்கள் அரிசியைக் களையும்போது இரண்டொரு கற்கள் தங்கிவிட்டன போலும். அது எனக்குத் துன்பத்தைக் கொண்டுவந்து விட்டது."

"உனக்குக் கீழிருப்பவர்களை நீ கவனிக்காதது குற்றந்தானே; இருப்பினும் இந்த முறை உன் பிழையை மன்னிக்கும்படி மன்னரிடம் கூறுகிறேன். இனி அப்படி நடக்காதே."

"இனி அப்படி நடக்க மாட்டேன், ஐயா! தங்களைத் தவிர வேறு எவராலும் என் துன்பத்தை நீக்க முடியாது. தாங்களே என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறி மீண்டும் அவர் காலில் விழுந்தான். ஒட்டக்கூத்தர் அவனுக்குத் தேறுதல் கூறி அவனை அனுப்பி வைத்தார்.

மறுநாள் மாலை நேரம். ஒட்டக்கூத்தர் மன்னன் குலோத்துங்கனுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அவருடைய சொற்சுவையில் மன்னன் மகிழ்ந்திருந்தான். திடீரென்று பேச்சு வேறு பக்கம் திரும்பியது. குலோத்துங்கன் புகழைப்பற்றிக் கூத்தர் பேசலானார்.

"மன்னர்பிரானைவிட அவருடைய பகைவர்களே ஒரு வகையில் பெருமையுடையவர்கள்" என்றார் கூத்தர்.

"எப்படி?" என்றான் வேந்தன்.

"எப்படியா? நாசம் வந்துற்றபோதும் நல்லதோர் பகையை அவர்கள் பெற்றார்கள். குட்டுப்பட்டாலும்

மோதிரக் கையால் பட்டதுபோல, தோற்றாலும் பேரரச னிடம் தோற்றோம் என்ற மகிழ்ச்சி அவர்களுக்கு இருக் கிறது."

மன்னன் மௌனம் சாதித்தான். கூத்தர் பேச்சைத் தொடர்ந்தார்.

"தங்கள் பகைவர்கள் ஒரு விதத்தில் துறவிகளாக வும் யோகிகளாவும் காணப்படுகிறார்கள். சோழர் படைக்கு முன்னிற்க மாட்டாமல் ஓடிக் காடுகளையும் மலைகளையும் புகலிடமாகப் பெறுவதால் அவர்கள் மேற் கூறியவர்களோடு ஒப்ப மதிக்கப்படுகிறார்கள்."

"அவர்கள் அவ்வாறு செல்லுகிறார்களோ இல் லையோ, தங்கள் சொல் அவர்களை அவ்வாறு செய்து விடும்."

"அது மட்டுமா, காட்டிலும் நாட்டிலும் இருந்தால் எங்கே சோழர் படை வந்துவிடுமோ என்று அஞ்சிக் கடலையே அரணாகக் கொள்வதையும் அவர்கள் தவறுவ தில்லை. பல சமயங்களில் வானத்தையே தங்களுக்குப் பற்றிடமாக அவர்கள் கொள்ளுகிறார்கள். மண்ணகத்தை உங்களுக்குக் கொடுத்து விண்ணகத்தை ஆள அவர்கள் செல்கின்றனர். பகைவர்கள் புகலிடமாகக் **கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள் பற்ற, வானகம் பற்ற வடிவேல் விடுக்கும் வீரர் தாங்கள்.**"

"சோழ நாட்டு மக்களே எப்பொழுதும் வீரர்கள் என்பதில் ஐயமில்லையே! தங்களைக் காத்துக் கொள்ள அவர்களுக்குத் தெரியும்."

"மக்களைக் காக்கும் தொழிலைச் செய்யும் திருமாலாகவும் தாங்கள் விளங்குகிறீர்கள். மீன்களைத் தன்னகத்தே கொண்ட கடலையும் மண்ணையும் மலைகளையும் உண்ட திருமால் அல்லவா, தாங்கள் !"

"தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை."

"நான் சொல்வது, தாங்கள் உணவை உண்ணும்போது சிறு கற்கள் கலந்திருந்தாலும் பொருட்படுத்த மாட்டீர்கள் என்பதுவே."

மன்னனுக்கு இப்பொழுது ஓரளவு விஷயம் புரியத் தொடங்கியது. எப்படிப்பட்ட விஷயத்தையும் இனிமையாக, கேட்போர் மனம் புண்ணுகாத வகையில் எடுத்துக் கூறுவதில் கூத்தர் சமர்த்தர் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே அவன், "கவிஞர்பிரான் கூறவேண்டியதை ஒளிவில்லாமல் சொல்லலாமே" என்முன்.

அதற்குப் பிறகு ஒட்டக்கூத்தர் முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினர். அதைக் கேட்ட குலோத்துங்கன், "நான் கற்கள் இருக்கின்றனவே என்றுதான் கூறினேனே தவிர எவரையும் வேலையிலிருந்து நீக்கச் சொல்லவில்லையே. கவிஞர் பிரானுக்குரிய ஒருவனை வேலையினின்றும் நீக்கிய அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறேன்" என்முன்.

"மன்னர்பிரான் சிறிது பொறுத்துக் கேட்கவேண்டும். சில சமயங்களில் ஒருவருக்குக் கீழுள்ளவர்கள் தங்கள் செய்கைகளால் தங்களுக்கு மேலுள்ளவர்கள் மீது மறையாத மாசை உண்டாக்கி விடுகிருர்கள்.

அறியாமையினுலோ தங்கள் மீதுள்ள அன்பினுலோ அரண்மனை அதிகாரிகள் இவ்வாறு செய்துவிட்டனர். அதற்காகத் தாங்கள் சினந்து கொள்ளக்கூடாது. அவர் களையும் தாங்கள் மன்னிக்கவேண்டும்.''

"கவிஞர்பிரானுடைய சொல்லுக்கு மறுசொல் நான் என்றும் சொன்னதில்லை. அங்ஙனமே ஆகுக" என்று மன்னன் கூறிச் சமையற்காரனை உடனே வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி கட்டளை அனுப் பினுன்.

அப்பொழுது ஒட்டக்கூத்தரிடமிருந்து ஒரு கவிதை மலர்ந்தது :

"மீனகம் பற்றிய வேலையும் மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள்பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங்கனே"

மறுநாளிலிருந்து கூத்தரின் விடுதிக்கு முன்னிலும் சுவையான பண்டங்கள் வந்தன. அவற்றைக் கொண்டு வந்த சமையற்காரன் முகத்தில் முன்போல் மகிழ்ச்சி தாண்டவமாடிற்று.

9. பரணி பாடியது

இரண்டாம் குலோத்துங்கன் மகன் இரண்டாம் இராசராசன் வாளை உறையில் வைத்து உலகாண்டான். அவன் காலத்தில் நாட்டில் பகையில்லை. சோழ நாட்டை எதிர்ப்பார் இலர். வேந்தனது வாளுக்கு வேலை இல்லாமற் போயிற்று. அதனால் அது உறையிலேயே கிடந்தது. அவனுக்கு **எதிரிலிச் சோழன்** என்ற ஒரு பெயர் உண்டு. போர்கள் இல்லாத அவன் நாட்டில் அமைதி நிலவியது. நாடு வறுமையின்றி, நோயின்றித் திகழ்ந்தது. நாட்டில் எங்கும் மகிழ்ச்சி நிறைந்திருந்ததால் இராசராசன், தந்தையில்லாதவர்களுக்குத் தந்தையாகவும், தாயில்லாதவர்களுக்குத் தாயாகவும், மைந்தரில்லாதவருக்கு மைந்தனாவும் இருந்து அரசாண்டு வந்தான்.

நாட்டில் அமைதி நிலவியதனால் இராசராசன் அருங்கலை விநோதனாகத் திகழ்ந்தான். புலவர் கூட்டத்திலேயே அவன் தன் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்தான். அவனது அவைக்களம் அகத்திய முனிவர் வாழும் பொதியமலை போன்றது என்று கூத்தர் குறிக்கிறார்.

வேந்தனுக்குக் கூத்தரிடம் மட்டற்ற மதிப்பும் பக்தியும் இருந்தன. கல்வியில் அவனுக்கு இருந்த ஆர்வம் நோக்கிக் கூத்தர் அவன் மீதும் ஓர் உலாப் பிரபந்தம்

பாடினர். முன் இரண்டு உலாக்களைவிட இராசராச சோழனுலா சொல்நயம், பொருள்நயம் சிறந்து விளங்கு கிறது. ஏனெனில் வயதும் அநுபவமும் புலமையும் முதிர்ந்த பழுத்த காலத்தில் கூத்தர் எழுதியது அது. இராசராசனும் அதை அறிந்தான். அதனல் அவன் இந்த உலாவின் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் விழுக்காடு ஒட்டக்கூத்தருக்குப் பரிசளித்தான்.

இராசராசன் ஓர் ஊருக்குக் கூத்தனூர் என்று பெய ரிட்டு அதனை ஒட்டக்கூத்தருக்கு மானியமாக வழங் கினன். கூத்தர் அங்கே அரிசிலாற்றங் கரையில் தம் வழிபடு கடவுளாகிய கலைமகளுக்குக் கோயில் கட்டிச் சில நாள் அங்கேயே தங்கியிருந்தார்.

இராசராசனுக்குத் தலைநகர் கங்கைகொண்ட சோழ புரமே. எனினும் அவன் புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம், உறையூர் முதலிய ஊர்களிலும் சில நாள் தங்கியிருந்தான். கூத்தருடைய உலாவில் இராசராசன் புகார் வீதியில் பவனி வருவது கூறப்படுகிறது. இராச ராசன் கங்கைகொண்ட சோழபுரத்தில் இல்லாத காலங் களில் எல்லாம் கூத்தரும் அவனைப் பிரிந்து கூத்தனூர், சீகாழி முதலிய இடங்களுக்குச் சென்று சில பகல் தங்கி யிருந்தார் என்று ஊகிக்கலாம்.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவர் தக்கயாகப் பரணி யைப் பாடுவதற்கு முன்பே நிகழ்ந்தன. ஏனெனில் கூத்தர் தம் பரணியில் ஆற்றங்கரைச் சொல் மடந்தை யையும் சீகாழியில் அவதரித்த திருஞான சம்பந்தரையும் பற்றிக் கூறியுள்ளார்.

ஒரு சமயம் இரண்டாம் இராசராசன் தராசில் ஏறி இருந்து தன் எடையளவு பொன்னை இரவலர், புலவர் முதலியோருக்கு வழங்கினான்.

அந்தச் சமயத்தில் கூத்தர், 'தராசில் இராசராசன் ஏறியிருந்த தட்டு உயர்ந்தது. பொன் நிறைந்த தட்டு மிகத் தாழ்ந்தது. இந்தக் காட்சி, மதியத்துக்கு அடுத்த நாளில் காலையில் முழுமதி மறையும்போது காலை ஞாயிறு எழுவது போன்றிருக்கிறது!' என்று ஒரு செய்யுளில் அவனைப் புகழ்ந்தார். சூரிய மரபைச் சேர்ந்தவனுக்குச் சூரியனை உவமை கூறியதும், அதற்கேற்பச் சந்திரனை நிறம்பற்றிச் செம்பொன்னுக்கு உவமை கூறியதும் மிகவும் பொருத்தமாக உள்ளன. இராசராசன் தன் எடையளவு பொன்னைத் தானம் செய்ததோடு அமையாமல் அந்த எடையினும் மிகுந்த பொன்னை வழங்கினான் என்னும் குறிப்பும் இதில் தோன்றுகிறது.

இங்ஙனம் ஒட்டக்கூத்தர் அவனைப் புகழ்ந்து கூறிய இடங்கள் பல.

கூத்தர், சோழர் மூவர் காலத்தில் அவர்களால் சிறப்பிக்கப்பெற்று வாழ்ந்தாரேனும் அம்மூவருள் இரண்டாம் இராசராசனையே மிகுதியாகப் புகழ்ந்திருக்கிறார். ஒட்டக்கூத்தரின் புலமைத் திறத்தை முற்றும் அறிந்து பாராட்டிப் பயன்படுத்திக்கொண்டவன் அந்த மன்னனே. அவன் வேண்டுகோளுக்கிணங்க ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணி என்ற நூலை இயற்றினார். இராசராசனைக் கூத்தர் இந்த நூலின் முதலிலும் இறுதியிலும் இடையிலும் வாழ்த்தியிருக்கிறார்.

தக்கயாகப் பரணியின் கதையாவது: தக்கன் என்பவன் நான்முகனுடைய மகன்; சிறந்த வலிமை பெற்றவன். அவனுடைய பெண்களில் தாட்சாயணி என்பவள் சிவபெருமானுக்கு வாழ்க்கைப்பட்டவள். தக்கன் இந்த உறவை விரும்பவில்லை. அவன் பெரிய வேள்வி ஒன்றை நடத்தினன். அந்த வேள்விக்கு அவன் தேவர் முதல் யாவரையும் அழைத்திருந்தான். சிவபெருமானை மட்டும் அழைக்கவில்லை. வேள்வி தொடர்ந்தது.

தாட்சாயணி தன் தந்தையையும் வேள்வியையும் பார்க்க விரும்பினள். அழையா விருந்துக்குப் போதல் கூடாது என்று சிவபெருமான் பணித்தார். அம்மைக்குத் தன் அப்பன்மீது இருக்கும் ஆர்வத்தால் தான் சென்று வருவதாகச் சிவபெருமானின் உத்தரவு பெற்றுச் சென்றாள்.

வேள்விச் சாலையில் இருந்த தக்கன் தாட்சாயணியைக் கண்டு அருவருப்புக்கொண்டு அவளையும் அவள் கணவனையும் எள்ளி இகழ்ந்தான். அதனைப் பொறுது அவள் தீக்குளித்து மறைந்தாள்.

இந்தச் செய்தியை அறிந்த சிவபெருமான், தக்கனுடைய வேள்வியை அழித்து அவனைத் தண்டிக்கும்படி வீரபத்திரக் கடவுளை ஏவினர். வீரபத்திரர் பூதப்படைகளுடன் சென்று தக்கனது வேள்வியை அழித்து அவனது தலையையும் கொய்தார்; வேள்விக்கு வந்திருந்த தேவர்களைத் தண்டித்தார்.

இந்தச் செய்தியைப் பொருளாகக்கொண்டு ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணி என்ற நூலைப் பாடினர்.

இவர் இயற்றிய பரணி சயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி போன்றது அன்று. புதிய அமைப்பை இவர் தக்கயாகப் பரணியில் மேற்கொண்டுள்ளார். பரணியின் முடிவில் பாட்டுடைத் தலைவனை வாழ்த்துவது மரபு. ஆனால் கூத்தரோ பாட்டுடைத் தலைவனை வாழ்த்தாமல் பரணியைச் செய்வித்தோனாகிய இராச ராசனை வாழ்த்தியிருக்கிறார்.

இராசராச சோழனுலாவும் தக்கயாகப் பரணியு மாகிய சிறந்த நூல்களைக் கூத்தர் செய்த பிறகு இராச ராசனுக்கு அவரிடம் மாறா அன்பு ஏற்பட்டது.

அடுத்த அத்தியாயத்திற் காணும் நிகழ்ச்சி இதனை வலியுறுத்தும்.

இராசராசனிடமே கூத்தருக்குப் பற்று மிகுதியாக இருந்தாலும் இளமை முதற்கொண்டு தம்மிடம் இருந்து கல்வி கற்று வளர்ந்து செங்கோலோச்சி மறைந்த இரண்டாம் குலோத்துங்கனைக் கூத்தர் மறந்தார் இல்லை. இராசராசனைத் தக்கயாகப் பரணியில் வாழ்த்தும் பல இடங்களில் குலோத்துங்கனுடைய செயல்களைக் கூறி, 'இத்தகையவன் மகன் வாழி' என்று அவர் பாடியிருப் பதனால் குலோத்துங்கன்மீது அவருக்கு இருந்த பற்றுத் தெரியவருகிறது.

O-,1FOKW
N56
100686

10. கங்காபுர மாளிகை

ஒட்டக்கூத்தர் இவ்வுலகில் நீண்ட நாள் வாழ்ந்தார். விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவர் காலத்திலும் புலமை அரசு செலுத்தினர். இந்த நீண்ட காலத்தில் அவர் பெற்ற பட்டங்களும் பதவிகளும் பல. மேலே கூறிய மூன்று வேந்தரே அல்லாமல் அக்காலத்தில் சிறப்புடன் வாழ்ந்த பல வள்ளல்களும் கூத்தரை மதித்து ஆதரித்தார்கள். தம் ஆயுட் காலத்தில் கூத்தர் அருளிச் செய்த நூல்கள் பல. தமிழ் மொழிக்கு அவர் புரிந்த தொண்டுக்கு அந்த நூல்கள் சான்ருக உள்ளன.

இறுதிக் காலத்தில் மூப்பினுல் அவர் உடல் தளர்ந்தது. கண்ணின் ஒளி மங்கியது. நரை திரை மூப்புக்களால் உடல் மெலிந்து வலிமை குன்றி ஆட்டம் கொடுத்துவிட்ட போதிலும் அவருடைய மனம் தளர்ச்சியின்றித் தூய்மை பெற்று விளங்கியது. வயது முதிர முதிர நாவன்மை அதிகமாயிற்று. அறிவு விரிவடைந்தது. அதனுல் அவர் ஐம்பொறிகளை அடக்கி உள்ளத்தை ஒரு வழிப்படுத்தித் தெய்வ சிந்தனையில் ஆழ்ந்தார். சைவ சமயத்தில் மிகுந்த பற்றுடையவர் ஆதல்பற்றிச் சிவ தீட்சை பெற்று, விபூதி, உருத்திராட்சம் முதலியவற்

றையே சிறந்த அணிகளாகக் கொண்டு சைவப் பழமாகத் திகழ்ந்தார். மூவர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம் முதலிய நூல்களில் மிகுதியாக ஈடுபட்டு அவைகளை நாளும் ஓதி வந்தார்.

ஓரிடத்தில் மடம் ஏற்படுத்திக்கொண்டு அங்கே தனியே வசித்துவந்தார் கூத்தர். தவசிப் பிள்ளை ஒருவன் கூட இருந்து அவருக்கு வேண்டியவைகளைக் கவனித்து வந்தான். அவருக்குக் கண் தெரியாவிட்டாலும் வேலைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. விடியலில் எழுந்து நீராடித் தூய உடையணிந்து இறை வழிபாடு, மறை யோதுதல் முதலியவற்றை முடித்துக் கொள்வார். பிறகு, தம்மிடம் வருவோர்க்குப் பாடம் சொல்லுவார். தம்மைக் காண வரும் புலவர்களுடனும் செல்வர்களுடனும் உரையாடுவார். சோழனது அரண்மனையிலிருந்து யோசனை கேட்க வரும் பெரிய அதிகாரிகள் முதலியவர்களுக்கு ஆவன கூறுவார். இவ்வாறு இனிதே பொழுதுபோக்கி வந்தார். இடையிடையே நூல்கள் இயற்றுவார். கண்ணை மூடிக்கொண்டு கூத்தர் கவிகளைச் சொல்லச் சொல்ல அவைகளை ஏடுகளில் எழுதிக் கொள்ளக் கற்றுச் சொல்லிகள் சிலர் அவருடன் இருந்தனர். இவற்றைச் செய்வதன்றி வெளியே செல்வதை அவர் அறவே நிறுத்திக்கொண்டார்.

இந்தக் காலத்தில் ஓர் நாளில் விசேட நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அது, இரண்டாம் இராசராசனுடைய பிறந்த நாளில் நிகழ்ந்தது.

வெளியே செல்வதை நிறுத்திக்கொண்ட ஒட்டக் கூத்தர், தன் பிறந்த நாளன்று அரண்மனைக்கு வரமாட்

டார் என்று இராசராசன் கருதினான். அதனால் அப்புலவருக்கு அந்த மங்கல நாளில் தான் செய்ய வேண்டிய சிறப்புக்களை அவர் இருந்த மடத்துக்கு முதல் நாளே அனுப்பி வைத்தான்.

இராசராசன் அனுப்பிய வரிசைகளைப் பெற்ற கூத்தர், தவசிப் பிள்ளையை அழைத்து, "தம்பி, நாம் நீண்ட நாளாக அரண்மனைக்குச் செல்வதில்லை அல்லவா! மன்னர் பிரானைப் பார்க்கக்கூட நாம் தவறிவிட்டோம்; நாளை அவருடைய வெள்ளணி நாள். அதனால் நாளை அவசியம் அரண்மனைக்குச் சென்று அரசரைக் கண்டு வாழ்த்திவிட்டு வருவதுதான் ஏற்றது. கூட்டம் நிறைந்த அவைக்குக் கண்ணில்லாத நான் செல்வது தகாது. ஆதலால் நாளை நீ வைகறைப் பொழுதிலேயே எழுந்து வெந்நீரையும் பூசைக்குரிய பொருள்களையும் விரைவில் சித்தம் செய்க" என்று முன்னெச்சரிக்கையாகக் கூறினார். இராசராசனை வாழ்த்துவதற்குரிய செய்யுட்களையும் மனத்திலே உருவாக்கிக்கொண்டார்.

முதல் நாளின் ஏற்பாட்டின்படியே மறுநாள் வைகறையில் எழுந்து கூத்தர் தம்முடைய காலைக் கடன்களை முன்னதாக முடித்துக்கொண்டு, அரண்மனைக்குச் செல்லுகிறவர் உடுக்க வேண்டிய முறையில் ஆடை முதலியவற்றை அணிந்து புறப்படத் தயார் ஆனார். அந்தக் காலை நேரத்தில் அங்கே தவசிப் பிள்ளையும் கூத்தரும் அன்றி வேறு எவரும் இருக்கவில்லை.

தவசிப் பிள்ளை கைத்தடியையும் திருநீற்றுப் பையையும் எடுத்து அவரிடம் சேர்த்துவிட்டுப்

பெட்டி வண்டியைக் கொணர்வதாகச் சொல்லி வெளியே சென்ருன். சென்றவன் திரும்ப வேண்டிய நேரத்தில் வரவில்லை. நாழிகை சென்றுகொண்டே இருக்கிறதே; அவன் ஏன் இன்னமும் வரவில்லை என்று கூத்தர் சிந்தனையில் ஆழ்ந்தார். அவருடைய கூர்மை யான செவிகள் தவசிப் பிள்ளை வருகிருனு என்று அவனது காலடி ஓசையை அறியக் கூர்ந்து கவனித்தன.

அந்தச் சமயம் வண்டி முன்வாசலில் வந்து நிற்கும் ஓசை கேட்டது. சிறிது நேரத்தில் காலடி ஓசையும் கேட்டது. கூத்தர், "தம்பீ, நேரமாய்விட்டதே! கால தாமதம் செய்துவிட்டாயே. எங்கே, கைகொடு; நான் மெல்ல எழுகிறேன்" என்று சொல்லித் தம் வலக் கரத்தை நீட்டினுர். ஒரு கரம் கூத்தரின் கரத்தைப் பற்றியது; மெத்தென்ற அந்தக் கரத்தின் பிடிப்பு ஒட்டக் கூத்தரை வியப்பில் ஆழ்த்தியது. உடனே கூத்தர் தம் இரு கரங்களால் அந்தக் கையைப் பற்றிக் கொண்டார். "இந்தக் கரம் வாழ்க! வெல்க! கங்காபுர மாளிகைக்கு நான் வருவதன் முன் கங்காபுர மாளிகையின் பரிசம் எனக்குக் கிடைத்தது!" என்று குதூகலித்தார்.

கங்காபுரம் என்பது கங்கைகொண்ட சோழபுரம். மாளிகை என்பது அரண்மனை. பின்னே உள்ள தொட ருக்கு, கங்காபுரத்தை ஆளுகின்றவனுடைய கை என்பது பொருள். இத்தொடர் கங்காபுரம், ஆளி, கை என மூன்று சொற்களால் ஆனது.

கூத்தர் மேலும், "இது எத்தகைய கை! இதன் அருமை என்னே! அண்டமளாவிய மலையினும் மேம்பட்

டோங்கும் விந்திய மலைச்சாரலிலுள்ள காட்டில் பகை வரை ஒழித்து அவர்களது தலைமீது நடந்து செல்லும் இயல்பு வாய்ந்த யானைகளையுடைய சயதுங்கனே! கொலைத் தொழில் மிக்க வேலையுடைய அரக்கர்களின் குலம் அழியும்படி இராமாவதாரத்தில் வில்லை ஏந்திய கையே இது!'' என்று தம் கையைப் பற்றிய இராசராச னைத் திருமாலின் அவதாரமென்று மிகவும் புகழ்ந்து பாராட்டினர்.

இராசராசனுக்கு முன்னரே வேறு ஓர் அரசனும் ஒரு புலவருக்குக் கைகொடுத்துள்ளான்.

சங்க காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த புலவர்களில் கபிலரும் ஒருவர். அவர் காலத்தில் அவரைப்பற்றி மற்றப் புலவர்களும் அவரைப் புகழ்ந்து தம் பாக்களில் பாடி யுள்ளனர். அவருடைய சிறப்பு இதனால் நன்கு விளங் கும். அவர் பாரி, கடுங்கோ வாழியாதன் முதலியவர் களால் ஆதரிக்கப் பெற்றவர்.

சேரவரசனாகிய சேரமான் செல்வக் கடுங்கோ வாழி யாதனைப் பல முறை கபிலர் புகழ்ந்துள்ளார். பதிற்றுப் பத்தில் ஒரு பத்தால் அவன் புகழைப் பாடியிருக்கிறார். அத்தகையவன் ஒரு முறை கபிலரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது அவருடைய கையைப் பற்றினான். அப்பொழுது அவருடைய கை மெல்லியதாக இருப்பதை அறிந்தான். உடனே, ''மெல்லியவாமால் நுங்கை'' என் றான். அதற்கு கபிலர், "பல போர்களைச் செய்து உரம் ஏறியதால் உங்கள் கை வலிமையுள்ளதாக இருக்கிறது. புலவர்களாகிய நாங்கள் நீங்கள் வழங்கும் சோற்றை

உண்டு கைகளுக்கு வேலையில்லாமல் அறிவொன்றையே கொண்டிருப்பதால் எங்கள் கை மெல்லியதாயிருக்கிறது'' என்றார்.

புலவர்களுக்குக் கை கொடுக்கும் வழக்கம் சங்க காலத்திலேயே இருந்ததென்பது இதனால் நமக்குப் புலனாகிறது. கவிச் செல்வர்களாகிய புலவர்களும் புவிச் செல்வர்களாகிய தாங்களும் சமம் என்பதை விளக்கவே அரசர்கள் இவ்வாறு செய்வதுண்டு. அந்த முறையில் ஒட்டக்கூத்தருக்கு இரண்டாம் இராசராசசோழன் கைகொடுத்தான்.

தன் கையைக் கொண்டு தன்னையறிந்து கூத்தர் பாராட்டியதைக் கண்டு இராசராசன் வியப்படைந்தான். வியப்படைந்த அவன் கூத்தரை நோக்கி, "நடுங்கா நாவின் உரை மூதாளரே வணக்கம், வணக்கம்! நிலம்படர் வணக்கம்! வயது முதிர்ச்சியினால் தாங்கள் அரண்மனைக்கு வர இயலாதென்று கருதி இன்று முதன் முதலில் தங்களைச் சேவிக்க நானே வந்தேன். இன்று வேலைகள் மிகுதியாக இருப்பதனால் காலை நேரத்தில் பொழுது புலரும் வேளையில் வந்துவிட்டேன். தங்கள் தவசிப் பிள்ளை வண்டிக்குச் செல்வதைக் கண்டு அவனை இடையில் நிறுத்திவிட்டு நானே வந்துவிட்டேன். 'சூரியன் காணாத இடத்தையும் புலவர்கள் காணக்கூடும்' என்ற பொருளில் தெலுங்கு மொழியில் உள்ள பழமொழி தங்களால் மெய்ம்மையானதை நான் கண்டு கொண்டேன். தங்கள் கையை நான் பிடித்தமாத்திரத்தில் என்னைத் தாங்கள் இன்னவன் என்று அறிந்துகொண்ட புத்தி நுட்பம் வேறு எவர்பால் காணப்படும்! மறு

முறை வணங்குகிறேன். ஆசி கூறுங்கள்” என்று சொல்லிக் கூத்தருடைய மலரடிகளைத் தொட்டான்.

“அரசர்கள் தெய்வம் ஒன்றைத்தான் பணியவேண்டும். மானிடர்களைப் பணிவது ஏற்புடைத்தன்று. நான் எவ்வளவு கூறினும் தங்கள் உயர்குடிப் பிறப்புக்கேற்ற உயரிய செயல்களை நீங்கள் மறக்க மாட்டீர்கள். இமயமுள்ளளவும் பொதியமுள்ளளவும் காவிரியுள்ள அளவும் தாங்கள் பொலிந்து வாழ்க” என்று கூத்தர் இராசராசனை உள்ளங்குளிர உவந்து வாழ்த்தினர்.

பிறகு புலவர் அவன் நெற்றியில் தம் திருக்கரத்தால் திருநீற்றை அணிவித்து தாம் முதல் நாள் சிந்தித்து வைத்திருந்த வாழ்த்துப் பாக்களைக் கூறி அவனை மகிழ்வித்து அரண்மனைக்கு அனுப்பிவைத்தார்.

11. பட்டமும் பதவியும்

புலவர்களுக்கு அவரவர்கள் தகுதிக்கேற்ப அரசர்கள் பட்டங்களை வழங்குவது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். புலவர்களுக்கு அரசர்களேயன்றி வேறு பலரும் பட்டங்களை வழங்கியதுண்டு. சங்க காலத்தில் அறிவிற் சிறந்த புலவர்கள் 'ந' என்ற முன்னெழுத்தைப் பட்டமாகப் பெற்றிருந்தனர். நக்கீரனுர், நந்நாகனுர், நச்செள்ளையார், நப்பூதனுர், நப்பாலத்தனுர் முதலிய பெயர்கள் இதற்குச் சில உதாரணங்களாம். சிறப்புப் பெயர்கள் சிலவும் சங்க காலத்தில் பட்டங்களாகப் புலவர்களுக்கு வழங்கப்பட்டன. எனினும் இடைக் காலச் சோழர்கள் காலத்திலிருந்துதான் பட்டங்களும் விருதுகளும் புலவர்களுக்கு மிகுதியாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சங்க காலத்தில் மன்னர்களும் வள்ளல்களும் புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் யானைகள் பலவற்றை அளித்தனர் என்பதை நாம் கேட்கிருேம். வறுமையில் உழலும் அவர்கள் அந்த யானைகளுக்கு உணவு போட்டு எப்படிக் காப்பாற்ற முடியும்! தங்களுக்கே உணவு இல்லாததனுல்தானே அவர்கள் மன்னர்களையும் வள்ளல்களையும் நாடினுர்கள்! எனவே மன்னர்கள் தங்களை

நாடி வந்தவர்களுக்கு வெறும் யானைகளைக் கொடுத்த தோடு நின்றுவிடவில்லை. அவற்றின் பாதுகாப்புக்கு வேண்டிய பொருள்களையும் கொடுத்தனர். அது போலவே பிற்கால மன்னர்களும் புலவர்களுக்குப் பல்லக்கு முதலியன கொடுத்தபோது அவற்றுடன் அவற்றைச் சுமக்கும் ஆட்களையும் அனுப்பினர். அவர்களுக்காகப் புலவர்களுக்கு மானியங்கள் பலவற்றையும் அளித்தனர்.

அரசர்கள் புலவர்களுக்கு முடிசூட்டி அவர்களைச் சிறப்பித்ததும் உண்டு. சங்க காலத்திலே பொன்முடியார் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அது அவருடைய இயற்பெயர் என்று சொல்வதற்கில்லை. பொன்முடி பெற்றதாலேயே அப்பெயர் பெற்றிருக்கவேண்டும் எனக் கொள்ள இடம் இருக்கின்றது.

பிற்காலத்தில் கொங்கர் குல வரபதியாட் கொண்டான் என்பவன் பாரதம் பாடிய வில்லிபுத்தூரரை முடிகவித்துச் சிறப்புச் செய்தான் என வில்லி பாரதத்தின் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.

முடிகளையே அன்றி, பல்லக்கு, காளம், கொடி குடை, சில வகை அணிகள் முதலியவற்றையும் புலவர்கள் பெற்று வந்தனர். கொடி பிடித்துச் செல்லுதல், குடைதாங்கிச் செல்லுதல், அரசர்களுடைய பெயர்களைத் தம் பெயர்களோடு இணைத்துச் சூடுதல் முதலியனவும் பட்டங்களுக்கு ஏற்ற மரியாதைகளே என்று கருதலாம்.

ஒட்டக்கூத்தர், தம் காலத்துப் புலவர்களில் மிகச் சிறந்திருந்த காரணத்தால் பல பட்டங்களைப் பெற்

றிருக்கிருர். கவிகளை விரைவாக எளிதில் மிடுக்காகப் பாடும் வன்மையினுல் **கவிராட்சசன்** என்னும் பட்டம் இவருக்கு வழங்குகிறது.

கூத்தர் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்ல வர். இவருடைய நூல்களில் வடமொழித் தொடர்கள் பல காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட இருமொழிப் புலமையோடு பல கலைகளின் அறிவையும் பெற்றிருந்த கூத்தருக்கு, **சர்வஞ்ஞ கவி** என்ற ஒரு பட்டப் பெயர் உண்டு. 'எல்லாம் அறிந்த புலவர்' என்பது இந்தத் தொடரின் பொருள். இந்தப் பட்டத்தை வழங்கியவர் இன்னவர் என்பது புலப்படவில்லை.

செய்யுள் நெறிகள் இருவகைப்படும். அவை வைதருப்ப நெறி, கௌட நெறி என்பன. வைதருப்ப நெறி என்பது செறிவு, தெளிவு முதலியன அமையப் பாடுவது. பெரும்பாலும் ஓரின எழுத்துக்கள் வருவன வாயும், விசேடமான பொருளையுணர்த்தும் சொல்லாற்ற லுடையனவாயும், மோனை, எதுகை முதலியன அமையப் பெற்றனவாயும், உலக இயல்புகளைக் கடந்து அமைக்கப் படும் வருணனைகளையுடையனவாயும் பாடப்படும் செய் யுட்கள் கௌட நெறிச் செய்யுட்கள் என்று கூறப்படும். இவற்றுள் இரண்டாவதாகக் கூறிய கௌட நெறியை ஒட்டக்கூத்தர் காலத்துப் புலவர் பலர் விரும்பினர். கலிங்கத்துப் பரணி பாடிய சயங்கொண்டாரும் இந் நெறியையே கொண்டார். அதனுல் கூத்தரும் கௌட நெறியையே தழுவினர். கௌட நெறியில் இவர் சிறந் திருந்த காரணத்தால் **கௌடப் புலவர்** என்னும் பட்ட மும் இவருக்கு உண்டு. கவி ராட்சசன், கௌடப் புலவர்

என்ற இவ்விரு பட்டங்களையும் காங்கேயன் என்ற உபகாரி ஒருவர் கூத்தருக்கு வழங்கினர் என்று தனிப்பாடல் ஒன்று கூறுகிறது.

இவர் **கவிச் சக்கரவர்த்தி** என்ற பட்டத்தைக் குலோத்துங்கன் காலத்தில் அம்மன்னனுல் பெற்ற வரலாறு முன்பு ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது. கவிச் சக்கரவர்த்தி என்பதற்கேற்ப இவர் காளக் கவியாகவும் திகழ்ந்தார் என்பதும் முன்னே கூறப்பட்டது. ஒட்டக்கூத்தரைக் குறிக்கும் பல பாடல்களில் அவர் இப்பெயரால் குறிக்கப் பெறுகிறார். '**கவி**' என்பதும் இவருக்குரிய பட்டப் பெயர்களில் ஒன்று. 'கவியொட்டக் கூத்தன்' என்ற தொடர் இதனை வலியுறுத்தும். இப்பட்டமும் பல பாடல்களில் காணப்படுகின்றது.

மேலே கூறிய பட்டங்களோடு கூத்தர் தம் வாழ்க்கையில் சிறந்த பதவியைப் பெற்றிருந்தார். சோழர்கள் ஆட்சி தமிழ் நாட்டிலே ஓங்கியிருந்த காலத்தில் தொடர்ச்சியாக மூன்று சோழ மன்னர்களின் அவைக் களத்தில் செல்வாக்குப் பெற்று அம்மன்னர்களால் நன்கு மதிக்கப் பெற்றவர் இவர். இந்த மதிப்பைவிட வேறு எந்தப் பதவி வேண்டும்! வேறு புலவர் எவரும் இவர் காலத்தில் இத்தகைய பதவியில் இருக்கவில்லை. நாட்டில் மன்னனுக்கு அடுத்த மதிப்பை இவர் பெற்றிருந்தார். மக்களின் உள்ளக் கோயில்களில் தெய்வமெனத் திகழ்ந்தார்.

அரசர்களுடைய ஆதரவு பெற்று அவர்களுடைய அவையில் நீண்டகாலம் அதிகாரம் செலுத்திவந்த இவர் மீது புலவர் பலருக்குப் பொறாமை ஏற்பட்டதில் வியப்

பொன்றும் இல்லை. பொறுப்பான பதவிகளை ஏற்பவர்களைப்பற்றிப் பலர் பலவாருகக் கூறுவது இயல்பு. இது எல்லா நாடுகளிலும் காண்பதொன்று. பதவிகளைத் தாங்குவோரும் தம் அதிகார வெறியினுல் மயக்கங்கொண்டு மற்றவர்களை ஆட்டி வைத்தலும் கூடும். பதவி கிடைப்பின் முன்பிருந்த தம் குணங்களையும் பழைய நிலையையும் மறந்துவிடுவது சிலருக்கு இயல்பாகவும் இருக்கலாம்.

ஒட்டக் கூத்தரைப் பற்றிச் சில புலவர்கள் உண்மைக்குப் புறம்பான கதைகளைப் புனைந்துவிட்டார்கள். கூத்தர்மீது ஏற்பட்ட வெறுப்பினுலேயே அவர்கள் இவ்வாறு செய்திருத்தல் கூடும். ஒட்டக்கூத்தர்மீது இவர்களுக்குப் பொருமைக் காய்ச்சல் ஏற்பட்டதோ, இல்லையேல் கூத்தர் தம் பதவி மோகத்தினுல் இறுமாப்பை இவர்களிடம் காட்டியிருக்கிருரோ, காரணம் எதுவாயினும் சரி, கூத்தருக்குப் பழி தோன்றுமாறு சில வரலாறுகள் செவிவழிச் செய்திகளாக வந்து செய்யுள் வடிவில் நிலைபெற்றுவிட்டன.

பதவியில் உள்ள ஒருவரை மக்கள் பலர் வெறுப்பாராயினும் அந்த வெறுப்பைப்பற்றிய பேச்சு அவர்கள் காலத்தோடு மறைந்துவிடக்கூடும். ஆனுல் புலவர்கள் ஒருவரை வெறுப்பின் அவர்கள் வெறுப்புச் செய்யுள் வடிவில் அமரத்துவம் பெற்றுவிடுகின்றது. இவ்வாறே கிரேக்க நாட்டில் உயர்குணம் மிகுந்த சாக்ரடீஸைப் பற்றி இழிவான கருத்துக்கள் பல எழுத்து வடிவில் நிலை பெற்றுவிட்டன. பிற்காலத்தில் அந்த எழுத்தைப் படிப்போர் எல்லாம் அது உண்மை என்று கொள்ளல்

இயல்பே அன்றே! ஒட்டக்கூத்தரைப்பற்றிய செவிவழிச் செய்திகளின் வரலாறும் இத்தகையதே. இவை எல்லாம் செவிவழிச் செய்திகளே அல்லாமல் கூத்தர் காலத்திருந்த புலவரில் எவரும் இவரைப்பற்றி இழிவாகக் கூறியதற்கு ஆதாரம் ஒன்றும் இல்லை.

இவர் காலத்தில் வாழ்ந்த சில புலவர்கள் இவரையும் இவருடைய இயல்பு முதலியவைகளையும் மதித்துப் பாடியுள்ளமைக்குச் சில சான்றுகள் காணப்படுகின்றன. நெற்குன்றவாணர் என்பவர் ஒட்டக்கூத்தரைக் கற்பகச் சோலை போன்ற கையையுடைய வள்ளல் என்றும் கவிச் சக்கரவர்த்தி என்றும் கூறுகிறார். அழியக் கூடிய பொருட் செல்வத்தைப் புலவர்கள் பிறரிடம் கைநீட்டிப் பெறுகிறார்கள். அதற்கு ஈடாக அழியாத செல்வமாகிய நூற்செல்வத்தை உலகுக்குக் கொடுப்பதனால் புலவர்களைக் கன்னனுக்கு ஒப்பாக உலகம் மதித்துக் கூறும்.

ஒட்டக்கூத்தரைப் போன்று கவிச் சக்கரவர்த்தி பட்டத்தைப் பெற்ற கம்பரை எவரோ 'காசுக்குக் கம்பன்' என்று கூறியிருப்பினும் 'கம்பநாடுடைய வள்ளல்' என்று கம்பராமாயணத்தின் தனியன்களில் ஒரு செய்யுளில் கம்பர் பாராட்டப் பெற்றுள்ளார். இதனை நோக்கும்போது நெற்குன்றவாணர் கூத்தரின் கைக்குக் கற்பகச் சோலையை உவமை கூறியதில் புதுமை ஒன்றும் இல்லை. அது உண்மையே.

ஒட்டக்கூத்தர் மிகச் சிறந்த புலவர் என்று பிற்காலப் புலவர்களில் சிலர் கருதினர்கள். அவர்களில் தத்துவப் பிரகாசர் என்பவரும் ஒருவர். அவர் காலத்தில்

ஒட்டக்கூத்தர் என்னும் பெயரினையுடைய போலிப் புலவர் ஒருவர் இருந்தார். தத்துவப் பிரகாசர் அவரை ஒருமுறை சந்தித்தார். புலமையில்லாத ஒருவர் மிகச் சிறந்த புலவராகிய ஒட்டக்கூத்தரின் பெயரை வைத்துக் கொண்டிருப்பது தத்துவப் பிரகாசருக்குப் பிடிக்கவில்லை. எனவே, "ஒன்றும் அறியாதவனாகிய நீ மகாகவியின் பெயரை வைத்துக்கொண்டதால் மக்கள் உன் பல்லைப் பறித்து முதுகெலும்பை உடைக்க மாட்டார்களா? ஆதலால் வேறு மட்டப்பெயர் ஒன்றே உனக்குப் போதும்" என்று அவரை நோக்கிக் கூறினார்.

"பறியாரோ நின்வாயில் பல்லதனைப் பாரோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச் - சிறியஒரு
மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே ஆனக்கால்
ஒட்டக்கூத் தன்றான் உனக்கு"

என்பது அவர் வாக்கு. கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரின் புலமைத் திறத்தைத் தத்துவப் பிரகாசர் எவ் வளவு உயர்வாக மதித்திருக்கிறார் என்பதை இந்த வெண்பா காட்டுகிறது.

பிற்காலப் புலவர் பலர் ஒட்டக்கூத்தரைப் பெரும் புலவர்களின் பெயர்களோடு சேர்த்து இவரது பெருமை தோன்றக் கூறியுள்ளார்கள்.

தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலில் வரும் உதாரணச் செய்யுட்களை எழுதியவர் கூத்தர் காலத்தில் வாழ்ந்தவரே. கலிங்கப் போரும் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த மாளிகையும் விக்கிரமன், குலோத்துங்கன் முதலியவர்களைப் பற்றிய செய்திகளும்

இதில் செய்யுட்களாகக் கூறப்படுவதால் இவற்றின் ஆசிரியர் கூத்தரின் காலத்தவர் ஆகவேண்டும். கூத்தர் மலரி என்னும் ஊரினர் என்றும் கூத்தரின் வாக்கு மிகச் சிறந்ததென்றும் அவர் கூறியிருக்கிறார்.

கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணிக்கு மிகப் பழைய உரை ஒன்று இருக்கிறது. அந்த உரையை எழுதிய ஆசிரியர், கூத்தரையும் அவரது புலமையையும் உயர் வாகப் பாராட்டியிருக்கின்றார்.

குணநலனும் கல்வி நலனும் இவர்பால் பொருந்தி யிருந்தமையால்தான் மிகப்பெரிய வேந்தர் மூவர் இவரை ஆதரித்தார்கள். மட்டமான புலவராகவோ இறுமாப்பு முதலிய இழிகுணம் படைத்தவராகவோ இவர் இருந் திருந்தால் பல திசைகளிலிருந்து சோழரின் அவைக்கு வரும் புலவர்களை எல்லாம் அளந்து பார்க்கும் புலமை நிரம்பிய மன்னர்கள், கூத்தருக்குத் தங்கள் அவைக் களத்தில் முதலிடம் வழங்கியிரார்கள்.

ஒட்டக்கூத்தரைப்பற்றிப் பிற்காலத்தில் தோன்றிய செய்திகள் எல்லாம் வெறும் கற்பனைகளே என்பதற்கு இவையெல்லாம் தக்க சான்றுகளாகும்.

12. கூத்தர்காலப் புலவர்கள்

ஒட்டக்கூத்தர் வாழ்ந்த காலத்தில் தமிழ் நாட்டில் சோழர்களே மிகுந்த வலிமை வாய்ந்தவர்களாக இருந்தனர். பாண்டியரும் சேரரும் சோழரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். தமிழ் நாட்டில் அமைதி குடி கொண்ட பொற்காலம் அது. அந்தக் காலத்தில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் புலவர் பலர் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் பரிசிலரை நாடிச் செல்ல அக் காலத்தில் சிறப்பாக இருந்தது சோழ மண்டலம். ஆகையால் கூத்தர் காலத்தில் பல புலவர்கள் வாழ்ந்திருத்தல் கூடும். அவர்கள் அனைவரும் கூத்தரை அறிந்திருக்கலாம். சிலரைக் கூத்தரும் நேரிற் கண்டிருக்கலாம். ஆனால் இலக்கியங்கள் வாயிலாக நமக்குத் தெரியவரும் தகவல்கள் மிகச் சிலவே.

சயங்கொண்டார்

சயங்கொண்டார் என்பவர் முதற் குலோத்துங்கன் மீது கலிங்கத்துப் பரணி பாடியவர். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இப்புலவர் முதற் குலோத்துங்கனுடைய காலத்துக்குப் பிறகும் வாழ்ந்திருத்தல் கூடும். ஒட்டக்கூத்தரும் சயங்கொண்டாரும் சமகாலத்தவர் என்று கூறலாம். சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி பாடுங்

காலத்தில் கூத்தர் பெயர் பெற்றவராக இருக்கவில்லை. விக்கிரமன் காலத்தில்தான் கூத்தர் பெயரை அறிகிறோம். ஆதலால் தம் பரணியில் சயங்கொண்டார் கூத்தரைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. கூத்தருக்குச் சயங்கொண்டாரிடம் மிகுந்த மதிப்பு இருந்தது. கலிங்கத்துப் பரணியை அவர் மிகச் சிறந்ததாகக் கூறியுள்ளார்.

"பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி
கவிச்சக்ர வர்த்தி பரவ"

என்று கலிங்கத்துப் பரணியைப் பெரிய நூல் என்றும் பிறரால் பாடுவதற்கு அரியதென்றும் அதனைப் பாடிய சயங்கொண்டார் கவிச் சக்கரவர்த்தி என்றும் கூத்தர் இந்த அடியில் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. பரணி பாடுவதில் சிறந்த ஒரு புலவர் அந்தத் துறையில் வல்ல மற்றொருவரைப் புகழ்வதற்கு அவர்பால் இருக்கும் பெருந்தன்மையும் நடுநிலையும் காரணமாகும்.

தண்டியலங்கார மேற்கோள் ஆசிரியர்

தண்டியலங்காரத்தை எழுதியவர் தண்டியாசிரியர் என்பவர். தாம் எழுதிய அணி இலக்கண நூலாகிய தண்டியலங்காரத்துக்கு உதாரணக் கவிகளையும் அவரே எழுதியிருத்தல் கூடும். உதாரணச் செய்யுட்களை அவர் எழுதினரோ அல்லது வேறொருவர் எழுதினரோ என்பது நமக்கு நன்றாகப் புலப்படவில்லை. ஆயினும் அவைகளை எழுதியவர் ஒட்டக்கூத்தர் காலத்திலோ அவருக்குச் சிறிது காலத்துக்குப் பின்னரோ வாழ்ந்திருக்கக் கூடும். அவர் ஒட்டக்கூத்தருடைய கவிகள் செவிக்கும் மனத்துக்கும் இன்பம் பயப்பன என்று கூறியிருக்கிறார்.

சேக்கிழார்

சேக்கிழார் திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தை இயற்றியவர். தொடக்கத்தில் இவர் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் அமைச்சராக இருந்தவர். குலோத்துங்கன் சீவக சிந்தாமணியாகிய சமண காவியத்தில் ஈடுபட்டு அதனைப் படித்து வந்தான். அவ்வாறு அவன் அந்நூலைப் படித்தும் கேட்டும் மகிழ்வதைச் சேக்கிழார் விரும்பவில்லை. சைவ சமயத்தில் திருத்தொண்டர்களைப்பற்றி அரிய வரலாறுகள் உள்ளன என்று அரசனுக்குக் கூறி அவனது விருப்பத்தின்மேல் சிதம்பரத்தில் இருந்துகொண்டு பெரிய புராணத்தை ஓராண்டில் பாடி முடித்தார் சேக்கிழார்.

சேக்கிழாரிடம் குலோத்துங்கனுக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் யானைமேல் ஏற்றிப் பின்னே இருந்துகொண்டு புலவருக்கு அவனே குடை பிடித்தான் என்று சேக்கிழார் புராணம் கூறுகிறது. இந்தச் செய்தி உண்மையானால், குலோத்துங்கன் சேக்கிழாரை ஒட்டக்கூத்தர் போலவே மதித்திருந்தான் என்பது புலனாகும்.

மேல் வரலாற்றினால் சேக்கிழாரும் கூத்தரும் சமகாலத்தவர் என்று தெரிகிறது. ஆனால் ஒட்டக்கூத்தர் தம் நூலிலோ தனிக் கவியிலோ சேக்கிழாரைப்பற்றி ஒன்றும் கூறவில்லை ; சேக்கிழாரும் ஒட்டக்கூத்தரைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. சேக்கிழார் ஒரு பெருஞ் சிங்கம் ; கூத்தரும் அத்தகைய சிங்கமே. இந்த இரண்டு சிங்கங்களும் முட்டிக்கொண்டதாகவோ குலாவியதாகவோ நம்மால் அறிய இயலவில்லை. காரணம் யாதோ !

கூத்தர் இலக்கியப் புலவர். அவர், 'இலக்கியப் பயிற்சிக்குச் சமயம் தடையாகாது' என்ற கொள்கையை உடையவர்; சமண நூல்கள், பௌத்த நூல்கள், வைதிக நூல்கள் முதலிய பலவற்றையும் பயின்றவர்; பிறர்க்கு அவைகளைப் பாடம் கற்பித்தவர். சேக்கிழாரோ சைவத்தில் தோய்ந்த புலவர். இலக்கியத்தைவிட அவருக்குச் சமயமே பெரிது. சமயத்தின் பொருட்டு அவர் இலக்கியத்தை உதறித் தள்ளுகிறவர். சீவக சிந்தா மணியைப் படிக்க வேண்டாம் என்று சேக்கிழார் குலோத்துங்கனைத் தடுத்தது உண்மையாயின் அச்செயல் கூத்தருக்குப் பிடிக்காததாகும். ஆயினும் சேக்கிழாரை நேர்முகமாக வெறுக்கும் ஆற்றல் கூத்தருக்கு இருந் திராது. ஏனெனில் அவர் பெரிய அமைச்சர்; பிற் காலத்தில் சைவக் குழாம் போற்றிய பெரியார். அவர் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக ஏற்றுக்கொள்ளப் பெற்ற பிறகு-சேக்கிழார் 'தொண்டர் சீர் பரவுவார்' என்று பட்டம் பெற்ற பிறகு - கூத்தர் அவரை எதிர்த்திருந்தால் கூத்தரின் செல்வாக்கு, சோழன் அவைக்களத்திலன்றித் தமிழ் நாட்டிலேயே குன்றி யிருக்கும்.

சேக்கிழாரின் நிலையும் அப்படியே! ஆஸ்தான கவி ஒட்டக்கூத்தர்; இரண்டாம் குலோத்துங்கனுடைய ஆசிரியர்; மந்திரி, பிரதானிகளைவிட அரசரிடம் செல் வாக்கைப் பெற்றுத் திகழ்ந்தவர். மேலும் அக்காலப் புலவர் எல்லாம் கூத்தரின் கல்வியறிவை அறிந்திருந்தனர். குலோத்துங்கனும் கூத்தரின் புலமையை அளந்து பார்த்து, அளப்பரிது என்று மதிப்பிட்டிருந்தான். இந்த நிலையில் சேக்கிழாரும் ஒட்டக்கூத்தரைக் கண்டித்து

எழுத முடியாது. உலகம் அதனை விரும்பாது என்பதைச் சேக்கிழாரும் உணர்ந்திருப்பார்.

இந்தக் காரணங்களினாலேதான் இவர்கள் இருவரில் ஒருவரை ஒருவர் தம் எழுத்தில் குறிப்பிடவில்லை.

வேறொன்றும் இங்கே குறிப்பிடத்தக்கது: கூத்தருக்கும் சேக்கிழாருக்கும் திருஞானசம்பந்தர்மீது அளவு கடந்த அன்பும் மதிப்பும் இருந்தன. ஆயினும் இருவரும் திருஞானசம்பந்தரை வேறு வேறு கோணங்களிலிருந்து நோக்கினார்கள்.

சேக்கிழார் சம்பந்தரை மானிடராகவே குறிக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆலால சுந்தரரின் அவதாரம் என்று கூறுகிறவர் சம்பந்தரை அவதார புருஷர் என்று குறிக்கவில்லை. முருகப் பெருமானுடைய அவதாரமே திருஞானசம்பந்தர் என்பது ஒட்டக்கூத்தரின் கருத்து. சேக்கிழார் சம்பந்தரை வெறும் மனிதராகக் கூறியதை அவர் விரும்பவில்லை. அந்தக் கருத்தைக் கூத்தர் பெரியபுராண அரங்கேற்றத்தின்போது கூறியிருக்கலாம். அங்ஙனம் கூறாததற்குக் காரணம் இருவரும் நேர்முகமாக மோதிக் கொள்ளக் கூடாத இடமும் காலமும் பொருந்திய சூழ்நிலையில் அவர்கள் வாழ்ந்ததே.

ஒட்டக்கூத்தருக்குச் சம்பந்தப் பெருமான் முருகக் கடவுளின் அவதாரம் என்று நிலைநாட்ட வேண்டும் என்னும் விருப்பம் மட்டும் இருந்தது. இரண்டாம் இராசராசன் காலத்தில் அந்தக் கருத்தை அவர் தக்கயாகப் பரணியில் உலகுக்கு அறிவித்திருக்கிறார்.

தக்கனுடைய கதையில் திருஞானசம்பந்த மூர்த்திகளின் வரலாற்றைச் சொல்லும் சந்தர்ப்பம் இல்லை. ஆயினும் கூத்தர் அதனைத் தக்கயாகப் பரணியில் நுழைக்க ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொண்டார். துர்க்கை இனிமையாகப் பொழுதுபோக்க எண்ணிக் கலைமகளை அழைத்து அருகே வைத்துக்கொள்ளுகிறாள். "என் மகன் முருகன் திருஞானசம்பந்தனாக அவதரித்துப் பாண்டிநாட்டில் சமணருடன் செய்த வாதத்தைப் பற்றிச் சொல்வாயாக" என்று கலைமகளுக்குக் கட்டளை இடுகிறாள். தக்கயாகப் பரணியில் ஆளுடைய பிள்ளையின் கதை புகுந்த வரலாறு இது.

திருஞானசம்பந்தரை முருகப்பிரான் அவதாரமென்று ஒட்டக்கூத்தர் கூறியபடியே பிற்காலத்திலிருந்த அருணகிரிநாதர் முதலிய முருகனடியார் பலரும் சைவப் பெரியார் சிலரும் கூறியிருக்கின்றனர்.

நெற்குன்றவாணர், நம்பி காளி

நெற்குன்றவாணர் என்பவர் ஒட்டக்கூத்தர் காலத்தில் இருந்த ஓர் உபகாரி; தமிழில் செய்யுள் செய்யும் ஆற்றல் படைத்தவர். திருப்புகலூர் அந்தாதி என்னும் ஒரு நூலின் ஆசிரியர்; களப்பிரர் என்னும் மரபினர்; நெற்குன்றம் என்பது இவருடைய ஊர். கூத்தர் போலிப் புலவர்களுடைய தலைகளை வெட்டுவதைப் பொருத இவர் ஒட்டக்கூத்தருக்கு ஒரு செய்யுள் விடுத்த செய்தி 'பெயர்க் காரணம்' என்ற அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது. கூத்தரின் புலமையில் இவருக்கு இருந்த மதிப்பு அந்தப் பாட்டால் தெரிகிறது.

நம்பி காளி என்பவர் நெற்குன்றவாணரால் பாராட்டப் பெற்ற ஒரு புலவர். யாதவ குலத்தைச் சேர்ந்தவர் அவர். நம்பி காளி ஒரு நாள் நெற்குன்ற வாணரைக் கண்டு பரிசில் பெற்றுவரச் சென்றார். அவர் சென்றபோது நெற்குன்றவாணர் வீட்டில் இல்லை. புலவரின் வருகையை அறிந்த தாதி ஒருத்தி நம்பி காளிக்கு அவர் வேண்டிய அளவு பரிசில் கொடுத்தனுப்பினாள். நெற்குன்றவாணர், வீட்டுக்கு வந்து விஷயத்தை அறிந்தார். தாதி புலவருக்கு அளித்த பரிசில் போதா தென்று கருதி அவர் மேலும் மிகுந்த பொருளை நம்பி காளிக்கு அனுப்பினார். ‘கற்கும் கலைவல்ல யாதவர் கோன் நம்பி காளிக்கு நாம், விற்கும் பரிசனம் ஆகிவிட் டோம்’ என்னும் அடிகளில் நம்பி காளிக்குத் தாம் ஆட்பட்டவர் என்பதைக் காட்டியுள்ளார். இவ்விதம் ஒரு வரலாறு கூறுகிறது.

இந்த நம்பி காளி பட்டமரம் ஒன்றைத் தழைக்கப் பாடினார் என்று தெரிகிறது. தமிழ் தெய்வத் தன்மை பொருந்தியதென்பதும் அதனைப் பாடுவோர் தேவரோடு ஒப்பர் என்பதும் இவருடைய கொள்கைகளாகும்.

நம்பி காளியும் ஒட்டக்கூத்தரும் ஒரு காலத்தவ ரேனும் ஒருவர் வாக்கில் மற்றொருவர் குறிக்கப்பட வில்லை. தக்கயாகப் பரணிக்கு உரை செய்த ஆசிரியர் நம்பி காளியை உயர்த்தியிருப்பதனால் கூத்தரும் நம்பி காளியும் இலக்கியப் பணியிலும் புலமையிலும் ஒத்த கருத்தும் தகுதியும் வாய்ந்தவர்கள் என்று ஊகிக்கலாம். வேறொரு புலவர் நம்பி காளி, கூத்தர் என்னும் பெயர்களை அடுத்தடுத்து வைத்து, ‘காளி ஒட்டக்

கூத்தன்' என்று கூறியிருப்பதும் இந்தக் கருத்தை வலியுறுத்தும்.

கம்பர்

விநோத ரசமஞ்சரி என்னும் நூல் கம்பரும் கூத்தரும் ஒரு காலத்தவர் என்று கொண்டு விந்தையான சில கதைகளைப் புனைந்து கூறுகின்றது. இந்தக் கதைகளுக்கு ஆதாரமாக உள்ளவை சில தனிப் பாடல்களாகும்.

கம்பரும் கூத்தரும் தனித்தனியே இராமாயணம் பாடினர் என்றும் கூத்தர் தம் இராமாயணம் கம்பரின் இராமாயணம் போன்று சுவையுடையதாக இல்லை என்றும் கண்டாராம். கண்ட பிறகு தாம் எழுதிய ஏடுகளைக் கிழித்து வந்தாராம். அந்தச் சமயத்தில் அங்கே தற்செயலாய் வந்த கம்பர், கூத்தர் கிழித்தவை போக எஞ்சியிருந்த ஏடுகளை அவர் கையிலிருந்து எடுத்துக்கொண்டாராம். இராமாயணத்தின் இறுதிக் காண்டமாகிய உத்தர காண்டம் மட்டும் அழியாமல் இருந்ததாம். அப்பொழுது கம்பர் கூத்தரை நோக்கி, "நான் இராமர் முடிசூடிய வரையில்தான் எழுதியிருக்கிறேன். உத்தர காண்டம் எழுதவில்லை. இனியும் எழுதப் போவதில்லை. ஆதலால் இது இருக்கட்டும்'' என்று கூறி அதனை அழியாமற் காத்தாராம். இந்த வரலாற்றுக்கு ஏற்ப இராமாயணத்தின் பழைய அச்சுப் பிரதிகள் பலவற்றில் உத்தர காண்டம் ஒட்டக்கூத்தர் இயற்றியதாகவே குறிக்கப்படுகின்றது. இது தவறு. உத்தர காண்டம் எழுதியவர் வாணியன் தாதன் என்ற புலவர் ஆவர்.

கம்பர் இரண்டாம் இராசராசன் காலத்தில் இளைஞ ராக இருந்தபோது முதன் முதல் அரசவைக்கு அறிமுகம் செய்யப்பெற்றவர் ஆதல்வேண்டும். அந்தக் காலத்தில் ஒட்டக்கூத்தர் அரசவையின் தொடர்பை விட்டு ஓய்வு பெற்றிருந்த முதுமைப் பருவத்தவர் ஆவர் என்று சிலர் கருதுவர். கம்பர், கூத்தர் காலத்துக்குப் பிற்பட்டவராக வும் இருக்கலாம்.

புகழேந்தி

புகழேந்திப் புலவர் என்பவர் தொண்டை மண்ட லத்தைச் சேர்ந்த பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். மள்ளுவ நாட்டை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்னும் உபகாரி ஒருவனுல் ஆதரிக்கப் பெற்றவர். நள வெண்பா வைப் பாடியவர். நளவெண்பா சுவை மிகுந்து படிப் போர்க்கு இன்பம் தரும் சிறந்த நூலாகும். இந்த நூலை இவர் இயற்றிய காரணத்திஞல் புகழேந்தி என்ற பெய ரைப் பெற்ருர் போலும்! இவர் ஒட்டக்கூத்தருக்குக் காலத்தால் பல ஆண்டுகள் பிற்பட்டவர். இருவரும் ஒரு காலத்தவர் என்பதற்குச் சரித்திர ஆதாரங்கள் இல்லை. விநோத ரசமஞ்சரி, தமிழ் நாவலர் சரிதை போன்ற சில நூல்கள் கூத்தரையும் புகழேந்தியையும் சமகாலத்தவராக வைத்துப் பொய்க் கதைகள் பலவற் றைக் கற்பித்துள்ளன. இந்தக் கதைகளுக்கு ஆதாரமாக உள்ள தனிப் பாடல்களைச் செய்தவர் எவரென்று புலப்படவில்லை. ஒட்டக்கூத்தர், புகழேந்தி இருவரும் சம்பந்தப்படும் கதைகளுக்குச் சான்ருக உள்ள பாடல் கள் அனைத்தையும் பிற்காலப் புலவரில் ஒருவரே இயற்றிக்

கதையைக் கேட்போருக்கு நயமாகச் சித்திரித்திருக்க வேண்டும்.

பொய்யும் வழுவும் கலந்து புனையப்பட்ட கூத்தர், புகழேந்தி வரலாறு, 'கற்பனைச் செய்திகள்' என்ற தலைப்பில் இந்த நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. புகழேந்தியைச் சார்ந்து கூத்தருக்குப் பகைவராக ஔவையாரும் இருந்தார் என்ற செய்தியும் கற்பனையே.

13. கூத்தரும் சோமனும்

ஒட்டக்கூத்தர் காலத்தில் சோழ நாட்டில் உள்ள திரிபுவனம் என்னும் ஊரில் சோமன் என்ற ஒரு கொடையாளி இருந்தான். அவன் புகழ் சோழநாட்டில் மட்டுமல்லாமல் பிற நாடுகளிலும் பரவியிருந்தது. செல்வத்தில் அரசனுக்கு நிகராக அவன் வாழ்ந்தான். பல புலவர்களை ஆதரித்துவந்தான். இரவலர்களுக்கு வேண்டும் பொருள்களை இன்முகத்துடன் கொடுத்துவந்தான். இல்லை என்று இரப்போர்க்கு இல்லையென்று உரையா உள்ளம் படைத்தவனாக விளங்கினான்.

இத்தகைய கொடைக் குணம் அவனுக்கு இளமையிலிருந்தே இருந்துவந்தது. சோமன் சிறு குழந்தையாக இருந்தபோது ஒரு நாள் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது பெரியவர் ஒருவர் குழந்தையின்மேல் ஆசைகொண்டு குழந்தையைத் தம் கைகளில் எடுத்துக்கொள்ள எண்ணினார். ஆதலால் தம் இரண்டு கைகளையும் விரித்து நீட்டி, 'வா வா' என்று அழைத்தார். அவர் தன்னிடத்தில் பொருளை வேண்டுகிறார் என்று எண்ணித் தன் நெற்றியில் அணிந்திருந்த சுட்டி என்னும் அணியைக் குழந்தையாய் இருந்த சோமன் கழற்றிக் கொடுத்துவிட்டான். இதைக் கண்டதும் வந்தவர் வியப்பில் மலைத்து நின்றுவிட்டார்.

பிற்காலத்தில் சோமன் புகழ்பெற்றிருந்த சமயம் இச்செய்தி அவன் புகழ்ச் செய்திகளுடன் இணைக்கப் பெற்றது.

வேறொரு சமயம் ஒரு புலவர் கொடையில் தனக்கு நிகரில்லாமல் வாழ்ந்த கன்னனையும் சோமனையும் ஒன்றாக இணைத்துப் பாடியிருக்கிறார். அவ்வளவு புகழ்பெற்றவனாகத் திகழ்ந்தான் வள்ளல் சோமன். இந்நிகழ்ச்சிகளிலிருந்து கொடை சோமனுடைய பிறவிக்குணம் என்பது நமக்குத் தெரிகின்றது.

மற்றொரு புலவர் தனிப் பாடல் ஒன்றின் மூலம் சோமனைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். அச்செய்யுள் அவனது கொடைத் திறனைத் தெற்றென விளக்குகிறது.

'நிழலின் அருமை வெயிலிலே அறியலாம்; ஈசனுடைய திருவடி நிழலின் பெருமையை வெவ்வினையிலே காணலாம்; தமிழ்ச் சொல்லருமையை நான்கடிகளைக் கொண்ட நாலடியாரிலும் இரண்டடிகளைக் கொண்ட திருக்குறளிலும் பார்க்கலாம்; சோமனுடைய கொடையருமையை ஈயாத புல்லர்களிடத்திலே காணலாம்' என்னும் கருத்தமைய அவர் அவனைப் புகழ்ந்துள்ளார்.

இது சோமனது கொடைச் சிறப்பை விளக்குகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சோமனுக்கும் ஒட்டக்கூத்தருக்கும் நெடுங்காலமாகத் தொடர்பிருந்தது. கூத்தர் சோழனை எவ்வாறு விரும்பினாரோ அவ்வாறே சோமனையும் விரும்பினார். ஒட்டக்கூத்தரால் திரிபுவனத் தோன்றலாகிய சோமன் பலமுறை புகழப்பெற்றான்.

ஒரு முறை ஒட்டக்கூத்தரை அடிக்கும் பொருட்டுச் சில பழிகாரர்கள் அவரைத் துரத்திக்கொண்டு வந்தன ராம். அப்பொழுது கூத்தர், சோமன் மாளிகையில் புகலடைந்து தப்பினாராம். இந்நிகழ்ச்சி உண்மையா யிருக்குமானால் இது கூத்தர்பெருமான் சோழனவைக்கு வருவதற்கு முன்னதாக அவரது இளமைப் பருவத்தில் நடந்திருக்க வேண்டும். ஏனென்றால் சோழனவைக்களப் புலவராக ஆனபிறகு இந்நிகழ்ச்சி நடந்தது என்பது பேரரசனான சோழனுக்குக் களங்கத்தை உண்டாக்குவ தாகும். மேலும் ஒட்டக்கூத்தர் என்று சோழனவைக்கு வந்தாரோ அன்றிலிருந்தே அவருக்குச் சோணாட்டு மக்க ளிடம் புகழ் ஏற்பட்டுவிட்டது. மக்களுக்குக் கூத்தரிடம் அன்பு கலந்த அச்சம் இருந்தது. எனவே அப்பொழுது இந்நிகழ்ச்சி நடந்தது என்பது பொருந்தாததொன்றாகும்.

சோழனுடன் தொடர்பு ஏற்பட்ட பிறகும் கூத்தர் பன்முறையும் சோமனைச் சந்திக்கத் தவறவில்லை. இப் பொழுது முன்னிலும் அதிகமான நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. சோமனும் அவருடன் உரையாடுவதைப் பெரிதும் விரும்பினான். ஒட்டக்கூத்தரைக் காணும்போ தெல்லாம் பகலவனைக் கண்டு பங்கயம் மலர்வதுபோல சோமனுடைய முகம் மலர்ந்தது.

ஒருமுறை கூத்தர், சோமனுடன் அவனுடைய மாளிகையில் அளவளாவிக் கொண்டிருந்தார். அப்பொ ழுது சுவையான செய்திகள் பல அவர்கள் பேச்சில் காணப்பட்டன. இடையிடையே அரண்மனைச் செய்தி களும் கலந்தன. பேச்சின் நடுவில் ஏதோ நினைத்துக்

கொண்ட சோமன், "அரசரைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் எது?" என்று கூத்தரைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு ஒட்டக்கூத்தர், "தாங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அரண்மனைக்குச் செல்லலாம்; அரசரைச் சந்திக்கலாம்" என்று சொன்னார்.

"எப்பொழுது வேண்டுமானாலும் எப்படிப் பார்க்க முடியும்? மன்னருக்கு எவ்வளவோ அரச காரியங்கள் உள்ளனவே."

"இருந்தாலும் உங்கள் புகழையே அரசர் எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கிறார். பின்னும் சொல்லப் போனால் தேவியுடன் பேசிக் கொண்டிருக்கும்போது கூட உங்களுடைய புகழைத்தான் அவருடைய நா கூறுகிறது. இதை நான் கூறவில்லை; அரசரே பன்முறை என்னிடம் கூறியிருக்கிறார்."

"நீங்கள் என்மேல் உள்ள அன்பினால் அளவு மீறிப் புகழ்கிறீர்கள்."

"இல்லை, இல்லை. இது அளவான புகழ்ச்சி; இயல்பான புகழ்ச்சி. அரசரே உங்கள் புகழைக் கூறுகிறார் என்றால் என் போன்ற ஏழைகள் புகழ்ச்சி எம்மாத்திரம்!"

புகழுரை கேட்ட சோமன் அடக்கத்தின் அறிகுறியாகத் தலைகுனிந்தான்.

இந்த வரலாற்றிலிருந்து கூத்தருக்கும் சோமனுக்கும் இளமை தொட்டே நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது என்பது நமக்குப் புலப்படுகிறது.

14. பிற உபகாரிகள்

ஒட்டக்கூத்தர் காலத்தில் சோமனைத் தவிர அவரை ஆதரித்த வேறு சில வள்ளல்களும் இருந்தனர். காங்கேயன் என்பவன் கூத்தரை ஆதரித்தமை சோழமண்டல சதகச் செய்யுளால் தெரியவருகிறது. திருச்சிற்றம்பலமுடையான் பெருமாள் நம்பி என்பவனும் கூத்தரை ஆதரித்தான். இவனைப்பற்றிக் கூத்தரே தம் தக்கயாகப் பரணியில் புகழ்ந்திருக்கிறார்.

காங்கேயன்

காங்கேயன் என்பவன் பாவலர் மதிக்கும் கொடையாளியாகத் திகழ்ந்தான். புலவர்களுடைய புலமையறிந்து அவர்களுடைய தகுதிக்கேற்ப வரிசை செய்யும் இயல்பு இவன்பால் அமைந்திருந்தது. வரிசையறிந்து பரிசுகள் பல கொடுத்ததால் புலவர் பலர் இவனை நாடினர். பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவையினங்களைப் போலப் புலவர் கூட்டம் இவனைத் தேடி வந்தது. அந்த முறையில் ஒட்டக்கூத்தரும் இவனை நாடியிருக்கலாம்.

புதுவையிலே சடையன் என்றொரு வள்ளல் இருந்தான். அவன் அரசர்களுக்கும் பொருளுதவி செய்திருக்கிறான். அத்தகையவனுக்குச் சங்கரன் என்றொரு புதல்வன்

இருந்தான். அவனுக்கு ஒட்டக்கூத்தர் உதவித் தொழில் செய்து வந்தார் என ஒரு பாடலினுல் தெரிய வருகிறது. கூத்தர் சோழனவைக்கு வருவதற்கு முன்னர் அவனிடத்துப் பணி புரிந்தவராக இருத்தல் வேண்டும். அவனிடத்தில் இருக்கும் பொழுதே கூத்தர் கல்வி கேள்விகளில் சிறந்தவராக இருந்தார். எனவே நூல்கள் இயற்றும் திறமையும் அப்பொழுது அவருக்கிருந்தது.

ஒட்டக்கூத்தரின் புலமையை மேற்கூறிய காங்கேயன் என்ற வள்ளல் அந்தக் காலத்திலேயே அறிந்திருக்க வேண்டும். சிறந்த புலவர் ஒருவருடைய சேவையைத் தமிழ்நாடு அறியாமலிருக்கின்றதே என அவன் எண்ணினுன். எனவே அவன் ஒட்டக்கூத்தரைப் பலமுறை சிறப்பித்தான்.

அவரது கவிதை இயற்றும் திறமையைக் கண்டு 'கவிராட்சசன்' என்னும் பட்டத்தை அளித்தான். பின்பு அவர் பாடல்கள் பலவும் கௌட நெறியைத் தழுவி நின்றமையாலும் அவர் அந்நெறியில் பாடல் பாடுவதில் வல்லவராய் இருந்தமையாலும் 'கௌடப் புலவர்' என்னும் பட்டத்தையும் அளித்தான்.

காங்கேயனது கொடையையும் குணநலனையும் அறிந்த ஒட்டக்கூத்தர் அவன்மீது நாலாயிரம் பாடல்களைக் கொண்ட ஒரு கோவையைப் பாடினுர். அது 'காங்கேயன் நாலாயிரக் கோவை' என்று வழங்கப் பெறும். அந்த நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. கிடைத்திருப்பின் அவரது அருமைபெருமைகள் பின்னும் நன்ருக நமக்குப் புலப்பட்டிருக்கும். இளமை முறுக்கிலே

கூத்தர் செய்த அந்த நூல் கௌட நெறியைப் பின்பற்றி உலக இயல்புகளைக் கடந்த வருணனைகளோடு இருந்திருக்கும். அந்நூல் கிடைக்கப் பெருததால் தமிழ் நாட்டின் இலக்கியப் புதையலில் சிறந்த ஒன்றை நாம் இழந்து விட்டோம்.

பெருமாள் நம்பி

இவனுடைய முழுப்பெயர் திருச்சிற்றம்பலமுடையான் பெருமாள் நம்பி என்பது. இவன் குளத்தூர் என்னும் ஊரினன்; இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் படைத்தலைவனுகத் திகழ்ந்தவன்; பல்லவராயன் என்னும் பட்டத்தினைப் பெற்றவன். இவனுடைய பெயரால் ‘பல்லவராயன் பேட்டை’ என்னும் ஊர் இருக்கிறது.

சோழர் படைத்தலைவனுக இருந்த இவன் இரண்டாம் இராசராசனது அன்பிற்கு உரியவனுய் இருந்தான். பொறுப்பான பல பணிகளைச் செய்துவந்தான். இராசராசன் இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அரசு சிறந்த முறையில் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தான். அவனுக்குப் பிறகு அவன் மகன் மூன்ரும் குலோத்துங்கனுக்கு முடி சூட்டியவனும் இவனே.

இவன் ஒட்டக்கூத்தரிடம் பெருமதிப்பு வைத்திருந்தான். அவர் சிறந்த புலவர் என்ற காரணத்திற்காக மட்டுமல்லாமல் சோழவரசர் மூவரின் அவைக்களத்தில் பெருமையுடன் விளங்கியதாலும் இவனுக்கு அவரிடத்தில் பெருமதிப்பு இருந்தது. கூத்தருக்கு வேண்டிய உதவிகள் பல அவ்வப்பொழுது செய்துவந்தான் இவன்.

இரண்டாம் இராசராசன் ஒருமுறை சேரனோடு போர்புரிந்து வெற்றியடைந்தான். அப்பொழுது சோழர் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றவன் பல்லவ ராயனாகிய பெருமாள் நம்பியே. எனவே சேரனை வெற்றி கொண்ட புகழ், பெருமாள் நம்பியைச் சேர்ந்ததாகும்.

ஒட்டக்கூத்தர், பெருமாள் நம்பியைப் புகழ்ந்து இயற்றிய நூல்கள் இன்னவை என்பது நமக்குத் தெரிய வில்லை. தக்கயாகப் பரணியில் புலவர் வாக்கில் இவன் இடம்பெற்றுள்ளான். தக்கயாகப் பரணியில் இவனைப் பாராட்டியதிலிருந்து இவன்பால் ஒட்டக்கூத்தர் கொண்ட அன்பு புலப்படும்.

பேய்கள் யாவும் ஒன்றுகூடிக் காளியிடம் செல்லு கின்றன. "நாங்கள் மிகவும் பசித்துள்ளோம். எங்கள் பசி சொல்லுந்தரத்ததன்று. சேரனை வெற்றிகொண்ட பல்லவராயனைப் புகழாதார் அடையும் பசியைப் போன்றது எங்களுடைய பசி" என்று அவைகள் காளியிடம் முறையிடுகின்றனவாம். பேய்முறைப் பாட்டில் பின் வரும் தாழிசை காணப்படுகிறது.

> "வில்லவனைத் திறைகொண்ட வேற்றண்ட காபதியைப்
> பல்லவனைப் பாடாதார் பசியனைய பசியினமே!"

இந்தத் தாழிசையின்வாயிலாகப் பெருமாள் நம்பியின் புகழை ஒட்டக்கூத்தர் இலக்கியத்தில் பொறித்து விட்டார்.

இவ்வாறு கூத்தரால் பாடப்பெற்ற பெருமாள் நம்பி யும் காங்கேயனும் ஒட்டக்கூத்தரை ஆதரித்த வேறுசில உபகாரிகளாவர்.

15. நூல்களும் இயல்பும்

கூத்தரின் நூல்கள்

புலவர் பேசுவதில்லை; அவர் வாழ்ந்த காலம் பேசுகிறது. புலவர், தாம் வாழும் காலத்தின் வாய்; அவர் எழுதும் நூல் அந்தக் காலத்தின் கண்ணாடி. ஒரு புலவர் தாம் வாழ்ந்த காலத்துக்கு ஏற்பவைகளை எழுத வேண்டும். அவருடைய எழுத்து அந்தக் காலத்து மக்களுக்குப் பயன்பட வேண்டும். மேலே கண்டது இலக்கியத்துறையில் ஒரு பொதுவிதி. பல நாடுகளில் உள்ள அறிஞர்கள் இந்த விதியை ஒட்டியே நூல் எழுதுகிறார்கள். அவர்களுடைய நூல்களில் இந்த விதி அமைந்திருக்கிறது.

பெர்னாட் ஷா என்ற ஆங்கில மொழி அறிஞர் நேற்று வாழ்ந்தவர். தற்கால எழுத்தாளரில் முதல் வரிசையில் உள்ளவர். உரைநடை நூல்களையே அவர் மிகுதியாக எழுதியுள்ளார். ஒருவர் பெர்னாட் ஷாவை நோக்கி, "நீங்கள் ஷேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்திருந்தால் உங்களுக்கு இவ்வளவு புகழ் கிடைத்திருக்குமா?" என்று கேட்டாராம். அதற்கு அவர், "நான் அந்தக் காலத்தில் வாழ்ந்திருந்தால் செய்யுள் நாடகங்களை எழுதித் தள்ளி

ஷேக்ஸ்பியரின் பெயர் உலகுக்குத் தோன்ருமல் செய்திருப்பேன்" என்ருராம். ஷேக்ஸ்பியரோடு தம்மை ஒப்பிட்டு, பெர்னுட் ஷா தற்புகழ்ச்சியாக இதனைக் கூறவில்லை. அந்தக் காலத்தில் தாம் இருந்திருப்பின் அக்கால உலகுக்கு ஏற்ப நாடகங்களையே எழுதியிருக்க முடியும் என்ற கருத்தோடு இவ்வாறு கூறினர்.

தமிழ் மொழியில் சங்க காலத்து நூல்களில் பெரும்பாலன அரசர்கள், வள்ளல்கள் முதலியவர்களைப் புகழவே தோன்றியுள்ளன. அந்தக் காலத்து எட்டுத்தொகை நூல்களைத் திறந்து அவைகளில் உள்ள பாடல்களை நோக்கினுல், 'அவனை அவர் பாடினர், இவர் இவனைப் பாடி இந்தப் பரிசு பெற்ருர்' என்ற குறிப்புக்கள் அவைகளை ஒட்டிக் காணப்படும். தலைவன் தலைவியரின் பெயர் கூருமல் எழுதப்படும் அகப்பொருள் பற்றிய நூல்களிலும் பாட்டுடைத் தலைவனைப் பற்றிய புகழ்ச்சியுரைகள் காணப்படுகின்றன. அவைகளை மேலாக நோக்குவோர், 'பழம் நூல்கள் எல்லாம், செய்யுட்கள் எல்லாம் வெறும் மனிதரைப்பற்றிய பாராட்டாகவே உள்ளன' என்று நினைக்கக் கூடும். நம் பழம் புலவர்கள் சில நாள் வாழ்ந்து அழியக் கூடிய மக்களைப் புகழ்வதை முதல் நோக்கமாகக் கொண்டு நூல்களை இயற்றவில்லை. இம்மை மறுமைகளுக்கு இன்றியமையாத செய்திகளை அறம், பொருள், இன்ப நுகர்ச்சிக்கு ஏற்றவற்றை, படிப்போரின் மனம் பண்படத் தக்கவற்றை, பயில்தொறும் அறிவைப் பெருக்கும் சொற்பொருள் ஓவியங்களையே பழம் புலவர்கள் சங்க நூல்கள் வாயிலாக மக்களுக்கு வழங்கி யிருக்கிருர்கள். குழந்தைக்குத் தாய் மருந்தினைச் சர்க்கரையில்

பொதிந்து தருகிருள். இதனைப் போன்றதுதான் அந்த நூல்களில் புலவர் மக்களைப் புகழ்ந்திருப்பதும்.

நம் நாட்டு நூல்கள் வெறும் காலக்கண்ணாடிகள் மட்டும் அல்ல; அவைகளை எழுதினோர், தாம் வாழ்ந்த காலத்தவர்க்கு ஏற்ப மட்டும் பேசவில்லை; அந்தக் காலத்து மக்களோடுமட்டும் பேசவில்லை. அவர்களின் பேச்சு இப்பொழுது வாழ்கிறவர்க்கும், இனி இந்த நாட்டில் பிறந்து வாழப்போகிறவர்க்கும் கூட, மனத்துக்கும் அறிவுக்கும் உரமளிக்கும் அமுதாக உள்ளது.

இடைக்காலத்தே வாழ்ந்த ஒட்டக்கூத்தரின் நூல்களும் அவர் வாழ்ந்த காலத்துக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களோடு பெரும்பாலும் சங்க கால நூல்களின் போக்கை ஒட்டியே மக்களின் துதியாகப் பாடப்பட்டவைபோலக் காணப்படுகின்றன.

மூன்று உலாக்களும், பிள்ளைத் தமிழும், விக்கிரம சோழன்மீது அவர் பாடியதாகக் கருதும் கலிங்க வெற்றியைக் கூறும் பரணியும், அரும்பைத் தொள்ளாயிரமும், காங்கேயன் நாலாயிரக் கோவையும் மனிதர்களையே தலைவர்களாகக் கொண்டவை. தக்கயாகப் பரணி வீரபத்திரக் கடவுள் சிவபெருமானின் கட்டளைப்படி தக்கனது வேள்வியை அழித்ததைப்பற்றி இயற்றிய நூல் என்றாலும், அதன் முதலிலும் இடையிலும் இறுதியிலும் இரண்டாம் இராசராசனுடைய வாழ்த்தும் சிறப்புமே காணப்படுகின்றன. ஈட்டியெழுபதும் செங்குந்த மரபினரின் சிறப்பை விளக்கவே தோன்றியது.

கூத்தர் சரசுவதி யந்தாதி என்று ஒரு நூல் இயற்றிஞராம். "கோவையுலா, அந்தாதிக் கொட்டக்கூத்தன்..."

என்ற தொடரால் இது ஊகிக்கப்படுகிறது. இக்காலத்தில் அது கிடைத்திலது. இந்த நூல் ஒன்றைத் தவிர அவருடைய மற்ற நூல்கள் எல்லாம் மனிதரைத் தலைவராகக் கொண்டு எழுதப் பெற்றவை; என்றாலும் அவைகளில் பொதிந்துள்ள பொருள், இக்காலத்தாருக்கும் இனி வரும் காலத்தாருக்கும் பயன்படத் தக்கது.

மானிடரைப் புகழ்ந்து, அவர் தரும் செல்வம் பெற்று அவர்களுக்கு அடிமையானவர் கூத்தர் என்று கொள்வது பொருந்தாது. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை என்னும் நூலுக்கு வழிநூலாக நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலை அருளிச் செய்தார். சுந்தரமூர்த்தி நாயனார், 'பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்' என்று கூறிய ஒரு சொற்றொடரின் கருத்தை நம்பியாண்டார் நம்பி,

"தாரணியில் பொய்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

என்னும் பாடலாக விரித்துள்ளார். மக்களைப் பாடிய சங்கப்புலவரை இவர் 'பொய்யடிமை இல்லாதவர்' என்று கருதுகிறார். இவர் முதலாம் இராசராசன் காலத்து அடியார். நம்பியாண்டார் நம்பியின் கருத்தின்படி நோக்கும் போது ஒட்டக்கூத்தரும் பிறருக்கு அடிமைப்பட்டவர் அல்லர். அக்கால வழக்கம்போல் அவர் சோழர் முதலிய மனிதரைத் தலைவராகக் காட்டித் தம் நூல்களை அமரத்துவம் பெறும்படி எழுதியிருக்கிறார்.

தாம் வாழ்ந்த மூன்று சோழ மன்னர் காலத்து மக்களின் இயல்புகளையும் வாழ்க்கைமுறை முதலியவற்றையும் காட்டும் கண்ணுடியாக அவருடைய நூல்கள் திகழ்கின்றன. அக்கால வரலாற்றைக் காட்டும் கண்ணுடியாக மட்டும் இராமல் புதிதாக இன்று அவைகளைப் படிப்பவரின் உள்ளத்திற்கு ஊக்கம் அளிக்கும் அருமருந்தாகவும் அவை திகழ்கின்றன.

வழிபடு கடவுள்

ஒட்டக்கூத்தரின் வழிபடு தெய்வம் கலைமகள். கலைமகளுக்கு அவர் கூத்தனூரில் அரிசிலாற்றங்கரையில் ஒரு கோயில் கட்டினர். அங்கே இவர் எழுந்தருளப் பண்ணிய கலைமகளை, 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே' என்று தக்கயாகப் பரணியின் இறுதியில் வாழ்த்தியுள்ளார்.

ஈட்டி எழுபதைப் பாடும்பொருட்டு இப்புலவருக்குச் செங்குந்த மரபினர் தம் இனத்தவரின் தலைகளை வெட்டிக்கொண்டு வந்து கொடுத்தபோது, இவர் கலைமகளை வேண்டி இறந்தவர்களை எழுப்பியதாக ஒரு செய்யுள் வழங்குகின்றது.

"கலைவாணி நீயுலகில் இருப்பதுவும் கல்வியுணர்
கவிவல் லோரை
நிலையாகப் புரப்பதுவும் அவர்நாவில் வாழ்வதுவும்
நிசமே அன்ருே
சிலைவாணன் நாவிருந்தா யிரம்புயங்கள் துணிந்துமுயர்
சீவன் உற்ருன்
தலை ஆவி கொடுத்திடுசெங் குந்தருயிர் பெற்றிடநீ
தயைசெய் வாயே"

கவிவல்ல புலவர்களைக் கலைமகள் அவர்களுடைய நாவில்

இருந்துகொண்டு காப்பாற்றுகிருள் என்ற கொள்கையினர் இவர் என்பதும் வாணுசுரனுடைய ஆயிரம் புயங்களைக் கண்ணபிரான் துணித்த அன்று, கலைமகள் அந்த வாணனுடைய நாவிலிருந்ததனுல் அவன் இறந்து போகாமல் சீவன் பெற்ருன் என்பதும் இந்தக் கவியினுல் தெரிகின்றன. புலவர்களுக்குக் கலைமகள் இன்றியமையாத கடவுள் என்பது கூத்தரின் கருத்து. இந்தக் கருத்தை இச்செய்யுள் வலியுறுத்துகிறது. துர்க்கை கலைமகளை அருகில் வைத்துக்கொண்டு ஆளுடைய பிள்ளையாரின் கதையைச் சொல்லும்படி கேட்டதாக ஒரு வரலாற்றை இவர் தக்கயாகப் பரணியில் சேர்த்துள்ளார். தக்கனுடைய வேள்விக்கு வந்திருந்த தேவர்களில் ஒவ்வொருவரை ஒவ்வொரு வகையில் வீரபத்திரக் கடவுள் ஒறுத்தார் என்று பிறர் சொல்லும் கதைகளில் எல்லாம் கலைமகளின் நாசியை வீரபத்திரர் அரிந்தார் என்ற செய்தி காணப்படுகிறது. தமக்குக் கலைமகள்மீது இருந்த பற்றினுல் ஒட்டக்கூத்தர் இந்தச் செய்தியைக் கூறவில்லை.

தமிழ்நாவலர் சரிதையின் 117-ஆம் செய்யுளைச் சார்ந்த குறிப்பு ஒன்று, ‘சரசுவதி தம்பலம் கொடுக்கக் கவிதை உண்டாகிய கூத்த முதலியார் அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரம சோழன் கேட்டு ஒரு கவியை ஒட்டச் சொல் என்றபோது பாடியது’ என்று காணப்படுகிறது. கூத்தர் இளமையில் கலைமகள் மென்று கொடுத்த தம்பலத்தைத் தின்று கல்வியறிவு பெற்ருர் என்பதை இந்தக் குறிப்பினுல் நாம் அறிகிருேம். பெரிய புலவர்களிடம் தாம் கொண்ட அன்பினுல் சிலர் அப்புலவர்கள் நூற்பயிற்சி இன்றிக் கடவுளின் அருள்நோக்கால் ஒரு நாளில் புலவராயினர் என்று சொல்லுவது நம் நாட்

டில் தொன்றுதொட்டு வரும் மரபு. காளிதாசர், கம்பர், பொய்யாமொழிப் புலவர், காளமேகம் முதலியவர்களை இந்த வகையினர் என்று செவிவழிச் செய்திகள் கூறும். ஒட்டக்கூத்தருக்குத் தம் வழிபடு கடவுளாகிய கலைமகள் மீதிருந்த அன்பினை அறிந்த எவரோ ஒருவர் இந்தக் கருத்தைச் சித்திரித்திருக்க வேண்டும்.

தமிழன்பு

ஒட்டக்கூத்தருக்குத் தமிழ் மொழியினிடத்து அன்பு மிகுதியாக உண்டு. அகத்திய முனிவரைத் தமிழ் முனி என்றும் அவர் வாழும் பொதியிலைத் தமிழ்ப் பொதியில் என்றும் இவர் கூறுகிறார். தக்கயாகப் பரணியின் இறுதியில் தமிழ் மொழி, தமிழ் நூல்கள், தமிழ்ப் புலவர்கள், தமிழ்த் துறைகள் முதலிய யாவற்றையும் வாழ்த்தியிருக்கிறார். தமிழின்மீது தமக்கிருக்கும் பற்றினால், அம்மொழி தமிழ் நாட்டின் எல்லையையும் கடந்து என்றும் வாழ்க என்னும் கருத்தோடு,

"வாழி திசைக்கப் புறத்து நாற்கவி"

என்று இவர் கூறுகிறார். தமிழின்மீது இவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்ததனாலேயே இவர் பல நூல்களை இயற்றினர் என்று நாம் கருதலாம். பல வாழ்த்துக்களோடு,

"கூத்தன் கவிச்சக்ர வர்த்தி வாழியே,"
"வாழி கவிச்சக்ர வர்த்தி கூத்தனே"

என அவர் தம்மையும் தக்கயாகப் பரணியில் வாழ்த்திக் கொள்ளுகிறார். தாம் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று கூறிய நோக்கம், மேலும் மேலும் தமிழ்ச் சுவையை நுகர்ந்து தமிழ் நூல்கள் இயற்றி அந்த மொழிக்குத் தொண்டு செய்யும் பொருட்டே என்று நாம் கருத

வேண்டும். 'இவ்வுலகில் நீண்ட காலம் இருந்துகொண்டு தமிழமுதை உண்ணக் கிடைக்கப்பெறின், எனக்கு விண்ணுலக இன்ப நுகர்ச்சியும் வேண்டாம்' என்ற கருத்தைச் சில புலவர்கள் கூறியிருக்கிறார்கள். கூத்தர் தம்மை வாழ்த்திக்கொண்டது இந்த வகையைச் சேரும். அது தற்புகழ்ச்சியன்று. திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களிலும், வேறு நூல்களிலும் அவற்றை ஆக்கியோர், தற்புகழ்ச்சிபோல் எழுதிய பகுதிகளை நாம் காணலாம்.

பரந்த நோக்கம்

குறுகிய நோக்கமுடையவர் உண்மைப் புலவர் ஆகார். அவருடைய புகழ் குடத்துக்குள் வைத்த விளக்கே போன்று, பரவாமல் அவருடைய வாழ் நாளிலேயே அழிந்துவிடும். ஒட்டக்கூத்தர் பெருங் கவிகளில் ஒருவர். அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் தலைமை பெற்ற மூன்று சோழ மன்னர்களின் அவையில் சிறப்புற்று விளங்கியவர் இவர். சோழ மன்னரைக் காண பல சமயத்தவர், பல மொழியினர், பல கலைகளில் வல்லவர், வேற்று நாட்டு அறிஞர் முதலியவர்கள் வந்திருக்கக் கூடும். அவர்களில் பலரைக் கூத்தர் சந்தித்து உரையாடி இருக்கலாம். சோழர் அவைக்களத்தில் அவர்கள் பேச்சை உடனிருந்து கேட்டு இன்புற்றிருக்கலாம். இந்தவகைத் தொடர்புகளால் கூத்தரின் உள்ளம் பரந்த நோக்கைப் பெற்றிருக்க வேண்டும். சிலர் கருதுவது போல இவர் குறுகிய நோக்கம் உள்ளவர் அல்லர். வைக்கோலை வைத்திருக்கும் இடத்தில் படுத்திருக்கும் நாய் அதனைத் தானும் தின்னாமல் தின்னவரும் மாடு

களையும் அருகில் நெருங்கவொட்டாமல் வெருட்டுவது போல் இருந்தவர் அல்லர் கூத்தர். அங்ஙனம் இவர் இருந்திருப்பரேல் பேரரசர்களாகிய சோழர் அவையில் இவருக்கு நீண்டகால ஆதரவு கிடைத்திராது.

தாம் என்னும் இறுமாப்போ, புலவர்பால் அழுக்காறோ இவரிடம் இல்லை. இரண்டாம் இராசராசன் அருங்கலை விநோதன். அவன் அவையைப் பல புலவர்கள் அணி செய்தனர். அங்கே எப்பொழுதும் தமிழ் முழக்கம் இருந்தது. அந்த அவையைக் கூத்தர், அகத்திய முனிவர் வாழும் பொதியிலுக்கு உவமை கூறியுள்ளார். கலிங்கத்துப் பரணியையும் அதன் ஆசிரியர் சயங்கொண்டாரையும் இவர் பாராட்டியிருப்பது, 'கூத்தர்காலப் புலவர்கள்' என்ற அத்தியாயத்திற் கூறப்பட்டது. "கூழைத் தண்டமிழற்கேன் கொடியுங் காளமுமே" என்று இவர் தம்மைத் தாழ்த்திக்கொண்ட வரலாறும் முன்பு ஓரிடத்தில் கண்டது.

தக்கயாகப் பரணியில் தமிழ் மொழியையும் அதன் தொடர்பாக உள்ள பலவற்றையும் வாழ்த்தும் இடத்தில் கூத்தர்,

"வாழி தமிழ்க்கொத் தனைத்து மார்க்கமும்"

என்று கூறுகிறார்.

[தமிழ்க்கொத்து - தமிழ் நூல்களின் தொகுதி. அனைத்து மார்க்கமும் - எல்லா நெறிகளும்; கௌட நெறி முதலியன.]

கௌடப் புலவராக இருந்தும் வேறு நெறிகளையும் வாழ்த்துவதால் இவரது பரந்த நோக்கு வெளியாகிறது.

16. கற்பனைச் செய்திகள்

ஒட்டக்கூத்தர்மேல் பொறாமை கொண்டதனால் சில புலவர்கள் அவரைப்பற்றிய தவறான செய்திகளைச் செய்யுள் வடிவில் அமைத்துவிட்டனர் என்பதை, 'பட்டமும் பதவியும்' என்ற பகுதியில் கண்டோம். அவை யாவும் கற்பனைச் செய்திகளே. அவ்வரலாறுகளையும் அவை பொருத்தமற்றிருப்பதையும் கீழே காண்போம்.

சோழனுக்குப் பெண்பேசியது

ஒருமுறை இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பெண்பேசுவதற்காக ஒட்டக்கூத்தர் பாண்டியனிடம் சென்றார். அவ்வாறு சென்றவர் சோழனது சிறப்பைப் பாண்டியனுக்குத் தெரிவிக்க எண்ணினார்.

சோழன் அவையில் அவைக்களப் புலவர்களுக்குத் தலைவராக விளங்கிய ஒட்டக்கூத்தர், தம்மைப் பெண் பேசுவதற்காகச் சோழன் தேர்ந்தெடுத்ததை ஒரு பெருமையாகக் கருதியதனால் மிகவும் பொறுப்பான அப்பணியைத் திறம்பட செய்துமுடிக்க எண்ணினார். எனவே சோழ நாட்டைப்பற்றியும், சோழனைப்பற்றியும் புகழ்ந்து சொல்ல நினைத்தார். அவ்வாறு கூறும்போது சோழன் வலிமையுள்ளவன்; சிறந்தவன்; உயர்ந்தவன் என்று கூறி

யிருந்தால் போதும். ஆனால் அவர் சோழனை உயர்த்திக் கூறியதோடு பாண்டியனைத் தம் பாவில் தாழ்த்திக் கூறி யிருக்கிறார்.

“சோழனுடைய குலம் பிரசித்தி பெற்ற சூரிய குலம். அவன் கொடியோ வலிமை வாய்ந்த புலிக் கொடி; அக்கொடிக்கு மீனக்கொடி ஒப்பாகாது. ஊர் களிலே சிறப்புள்ளது என்று கூறப்பெறுவது சோழ னுடைய உறையூரே தவிர மதுரை யன்று. மாலையிலே ஆத்தி மாலைதான் பெருமையுள்ளது; வேம்பன்று. ஆறு களிலே பெருமை வாய்ந்தது காவிரியே யன்றி வையை யன்று” என்று இம்மாதிரி சோழனைப்பற்றியும் அவன் நாட்டைப்பற்றியும் அவர் புகழ்ந்து கூறினாராம்.

அதற்கு மறுமொழியாகக் கூத்தரது உரைகளைப் பாண்டியனின் அவைக்களப் புலவராகிய புகழேந்திப் புல வர் மறுத்துக் கூறினார்.

“சிவபெருமானுடைய தலையிலே வீற்றிருப்பவன் சந்திரனேயன்றிச் சூரியன் அல்லன். திருமாலினுடைய அவதாரம் மீனே அன்றிப் புலி அன்று. சிவபிரான் உளம் மகிழ்ந்து திருவிளையாடல்கள் புரிந்தது சிறந்த ஊராகிய மதுரைமாநகரில்தானே! திருஞானசம்பந்தர் எழுதி இட்ட ஏடு எதிரேறிச் சென்றது வையை ஆற்றில் அன்றோ! பேய் ஓட்டுவதற்கு வேம்பு பயன்படுகிறதே தவிர ஆத்தியன்று. ஆகையால் மீனவனுக்கு எவ்விதத் திலும் சோழன் நிகராகான்” என்று புகழேந்தியார் கூறினாராம்.

இந்நிகழ்ச்சி உண்மையாக நடைபெற்றதா என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டியதொன்று. அவ்வாறு சிந்தித்துப் பார்த்தால் இது பொய்யான செய்தி என்பது நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

ஒட்டக்கூத்தர் காலத்தில் சோழர்கள் மிக வலிமையோடு திகழ்ந்தார்கள். அவர்கள் தமிழ் நாடு முழுவதையும் தம் குடைக்கீழ் கொண்டுவந்து ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலத்தில் பாண்டியர்களோ, சேரர்களோ சிறந்து விளங்கியதாகத் தெரியவில்லை. குறுநில மன்னர்களாகப் பாண்டியர்களும் சேரர்களும் சிற்றிடங்களை ஆண்டு வந்தனர். அவர்கள் சோழனுக்குத் திறை கட்டி வந்தனர். இதைக் கல்வெட்டுக்களும் வரலாறுகளும் அறிவிக்கின்றன. எனவே வலிமை குறைந்தவனும் சோழப் பேரரசனுக்குத் திறை கொடுத்து வந்தவனுமான பாண்டியன் அவைக்களத்தில், அவன் அவைக்களப் புலவர் ஒருவர் சோழன் புகழைக் குறைத்துப் பேசியிருக்க முடியாது. அப்படிப் பேசியிருந்தாலும் பாண்டியன் அதைக் கேட்டு வாளாயிருந்திருக்க மாட்டான். தன்னைக் காட்டிலும் பேரரசனான சோழன் பகையை அவன் விரும்பானன்றோ!

இந்தக் கதையைப் புனைந்த புலவர்களே பின்பு, பாண்டியன் தன் மகளைச் சோழனுக்குத் திருமணம் செய்து வைத்தான் என்று கூறுகின்றனர். இது முன்னுக்குப் பின் முரண்பாடாக இருக்கிறது. 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்றபடி தொடக்கத்திலேயே ஏசலில் தொடங்கிய திருமணப் பேச்சு முறிந்து போயிருக்கும். தன்னையும் தன் நாட்டையும் குறைத்துப்

பேசும் இடத்தில் தொடர்பு கொள்ளப் பாண்டிய மன்னன் விரும்பியிரான். சோழனும் தன்னை எள்ளியவர்களை அழிக்க எண்ணியிருப்பானேயொழியப் பெண் கொள்ள இசைந்திருக்க மாட்டான்.

இவற்றை நோக்கும்போது மேற்கூறிய நிகழ்ச்சி கற்பனையே என்று முடிவு கட்டலாம்.

கூத்தர் புகழேந்தியைச் சிறைப்படுத்தியது

சோழனுக்காகப் பெண்பேச மதுரை சென்றபோது அங்கே பாண்டியன் அவையில் புகழேந்திப் புலவர்மீது பகை கொண்ட அன்றுமுதல் கூத்தர் அவரை வெறுத்தார்.

பாண்டியன் தன் மகளுடன் பல வரிசைகளைச் சோழ நாட்டுக்கு அனுப்பினன். தன் பெண்ணிற்கு அறிவுரை கூறும் துணைவராகப் புகழேந்திப் புலவரையும் அனுப்பி வைத்தான்.

சோழனவையில் தலைமைப் புலவராகவும் சோழனுக்கு வேண்டியவராகவும் இருந்ததால் ஒட்டக்கூத்தர் இப்பொழுது புகழேந்தியைப் பலவகைகளிலும் துன்புறுத்த எண்ணிக் காரணமின்றி அவரைச் சிறைப்படுத்தினர்.

சிறையில் இருந்த புகழேந்திப் புலவர் உணவின்றி வாடினர். அப்பொழுது சிறைச்சாலை வழியாக அவ்வூர்ப் பெண்கள் நீர் எடுக்கப் போவதை அறிந்த புலவர் அம்மகளிர் மகிழும்படியாகவும் அவர்களுக்குப் புரியும்படியாகவும் அல்லியரசாணிமாலை, பாண்டவர் வன

வாசம், பவளக்கொடி மாலை முதலியவற்றைப் பாடினர். அவற்றால் மகிழ்ந்த அம்மங்கையர் நாள் தோறும் உண வுப் பொருள்களைச் சிறைச்சாலையின் சாளரத்தின் வழி யாகப் புகழேந்தியாருக்குக் கொடுத்து வந்தனர். இதுவும் கற்பனைச் செய்தியே.

தமிழறிஞனும் புலவர்களை ஆதரித்து வந்தவனுமான சோழ மன்னன், பெரும் புலவராகிய புகழேந்தியாரைச் சிறையில் வைக்க இசைந்தான் என்பது நகைப்புக்கு இடம் தருவதாகும். புகழேந்தியார் மள்ளுவ நாட் டைச் சேர்ந்த சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனால் ஆதரிக்கப்பெற்றவர். அவன் குலோத்துங்கனுக்குக் காலத்தால் பிற்பட்டவன்.

தன் மகளுக்கு அறிவுரை கூறுவதற்காகப் பாண்டி யன் அனுப்பிய புகழேந்திப் புலவரைச் சிறையிலிடுவ தற்குச் சோழன் உடன்பட்டான் என்றால் அச்செயல் அவரை அவமதித்ததாகாது; பாண்டியனையே அவமதித்த தாகும். புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பாவுக் கும் அவர் இயற்றியவையாகக் கூறப்படும் அல்லி அர சாணிமாலை, பாண்டவர் வனவாசம் முதலிய நூல்களுக் கும், நடையிலும் நயத்திலும் எவ்வகை ஒற்றுமையும் இல்லை. காவல் அமைந்த சிறைக்கூடத்தில் காவலர் அறியா வகையில் மகளிர் உணவுப் பொருள்களைப் புகழேந்தியாருக்குக் கொடுத்தல் இயலாது.

புகழேந்தியார் இருந்த சிறையில் புலமை நிரம்பப் பெறாத சில தொழிலாளிகளும் அவருடன் இருந்தனர். அந்தத் தொழிலாளிகளுக்கு நல்ல பயிற்சியளித்து அவர் களைக்கொண்டு புகழேந்தியார் கூத்தரை அரசவையில் அவமானப்படுத்தினர் என்றும் கற்பனைக் கதை ஒன்று

கூறுகிறது. சிறையிலிருந்த சிறு காலத்திற்குள், அவர்கள் பெரும் புலவராகிய ஒட்டக்கூத்தரை வெல்லும்படியான திறமை பெற்றுர்கள் என்பது விந்தையே! எனவே இச்செய்தியும் தள்ளத்தக்கதே.

கூத்தரும் ஔவையாரும்

நெடுநாட்கள் சிறையிலிருந்த புகழேந்திப் புலவர், அரசியின் விருப்பப்படி மன்னனுல் விடுவிக்கப் பெற்றுர். பிறகு அவர், சோழன் மதிப்பிற்குரிய புலவராக விளங்கினுர். குலோத்துங்கன், தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் ஒட்டக்கூத்தரையும் புகழேந்தியையும் கூட்டிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டான். ஒருமுறை மூவரும் வெளியே சென்றபோது வழியில் அவர்கள் ஔவையாரைக் கண்டார்கள். அப்போது ஔவையார் இரண்டு கால்களையும் நீட்டி உட்கார்ந்திருந்தார். புகழேந்தியைக் கண்ட அவர் ஒரு காலை மடக்கிக் கொண்டார். அரசனைக் கண்டதும் இரு கால்களையும் மடக்கிக்கொண்டார். ஒட்டக்கூத்தரைக் கண்டதும் மீண்டும் இரு கால்களையும் நீட்டிக்கொண்டார்.

ஔவையாரின் இச்செயலுக்கு மன்னன் காரணம் கேட்டான். கவிக்கரசாதல் பற்றிப் புகழேந்தியைக் கண்டு ஒரு காலையும், கவியரசுகளைக் காக்கும் புவிக்கரசாதல் பற்றி மன்னனைக் கண்டு மரியாதை காட்டும் பொருட்டுத் தம் இருகால்களையும் மடக்கிக்கொண்டதாக ஔவையார் கூறினுர். தாம் மரியாதை காட்டுவதற்கு ஒட்டக்கூத்தரிடம் ஒரு தகுதியும் இல்லை என்றும் கூறினுர்.

பிறகு இரு புலவரின் திறமையையும் அரசனுக்குக் காட்ட எண்ணி, மதி என்ற சொல், மூன்று முறை வரு மாறு இருவரையும் செய்யுள் இயற்றும்படி ஔவையார் கூறினர். அப்பொழுது ஒட்டக்கூத்தரால் இரண்டு மதிகளே வருமாறு பாட முடிந்ததாம். அதனைக் கண்ட ஔவையார், 'ஒட்டா, ஒருமதி கெட்டாய்!' என்று கூறினராம். இந்தத் தொடர் இரு பொருளை உடையது. ஒட்டக்கூத்தரை இழிவு படுத்தும் நோக்கத்துடன் சொல்லப்பட்டது.

அரசனால் நன்கு மதிக்கப் பெற்ற ஒருவரை-அர சனுக்கு ஆசிரியராகிய ஒருவரை-அந்த அரசன் முன்னிலை யிலேயே, 'மதி கெட்டாய்!' என்று கூற எவருக்கும் துணிவு பிறவாது; அவ்வாறு எவரும் கூறவும் மாட்டார்.

புலவர்கள் இருவருடன் அரசன் வரும்போது ஒரு காலையோ அல்லது இரண்டு கால்களையோ ஔவையார் நீட்டிக்கொண் டிருந்தார் என்பது தவறான செய்தி யாகும்.

புலவரின் தலைகளைக் கொய்தமை

தாமே சிறந்த புலவர்கள் என்று இறுமாந்து திரிந்த வர்களைக் கூத்தர் வினக்களால் மருட்டி, அவர்களைத் தோல்விபெறச் செய்தார். தோற்றவர்களை இருவர் இருவராக நிறுத்தி, அவர்கள் குடுமிகளை ஒன்ருக முடிந்து, இரு தலைகளும் ஒரு வீச்சால் அற்றுவிழும்படி அவர்க ளின் தலைகளைக் கொய்தார் என்பது மற்ருெரு கற்பனைச் செய்தி.

புலமை இல்லாத ஒருவன் தான் புலவன் என்று உலகை ஏமாற்றித் திரிவது தலைவாங்கத்தக்க அளவு பெரும் குற்றமன்று. அவனை நல்வழிப்படுத்தவோ கண்டிக்கவோ வேறு வழிகள் உள்ளன. இவற்றை விட்டு, ஒட்டக்கூத்தர் பல தலைகளைக் கொய்தார் என்றால் நாட்டுக்குடையவன் அதனைக் கண்டு சும்மாயிருந்திருக்க மாட்டான். அச்செயலைச் செய்பவன் உற்றானாயினும் உறவினனாயினும் கற்றானாயினும் அரச நீதியை அவன் மீறி நடக்க, எந்த அரசனும் பார்த்துக்கொண் டிரான். இது அவனுக்குப் பழியும் பாவமும் ஆகும். இந்த முறையில் அரசனுக்குத் தன் ஆசிரியர்பிரானாகிய ஒட்டக் கூத்தர்மீது வெறுப்பு ஏற்பட்டிருக்கும். இதனால் கூத்தர் தம் பதவியையும் இழந்திருப்பார். பேரரசு செலுத்திய சோழர்கள் ஆட்சியில் அவைக்களப் புலவர் ஒருவர், அவர்களுடைய புகழுக்குக் கறை தோன்றும்படி இங்ஙனம் செய்தார் என்பது பொருந்தாது.

கூத்தரைப்பற்றி இத்தகைய புனை கதைகள் பல பின் வந்தோரால் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஒருவரைப் புகழ்ந்து கூறுவோர் ஒருபால் மிக மிக, அழுக்காற்றால் இகழ்வோரும் பெருகிக்கொண்டே யிருப்பர். இது உலக இயல்பு. பெரும் புலவராகிய கூத்தருடைய பெருமை மங்குமாறு கற்பனைச் சித்திரங்கள் சிலரால் புனையப் பெற்றாலும் அறிவுடைய உலகம், கூத்தரை ஒரு நாளும் மறவாது.

100686